# திராவிடநாடு

REGD M 4642

## அமெரிக்க தாராளம்

—*—

"ஒதுங்கி நிற்பதை அமெரிக்கா கை விட்டதென்பதே ட்ருமன் சித்தாந்தத்தின் அர்த்தமாகும். அக்காரணத்தாலேயே ரஷியரும் கம்யூனிஸ்ட்களும் அவ்விதபோக்கை விரும்பவில்லை. நாம் ஐரோப்பாவிலிருந்தும் ஆசியாவிலிருந்தும் வெளியேறுவோமென்று மாஸ்கோ நினைக்கிறது. நாங்கள் இல்லாவிட்டால் ஐரோப்பாவும் ஆசியாவின் பாகங்களும் ரஷ்யாவின் கையில் சிக்கிவிடும்."

லூயிபிஷர்



மலர் 6 ] 15—6—47 [ இதழ் 3

# பெண்கள் கற்பு பெண்களுக்குத் தான் தெரியும்.
# பண்டிதன் துணை வேண்டாம்

[கைவல்யம்.]

தங்கள் மதஸ்தர்களாலும், அன்னிய மதஸ்தர்களாலும் அடிபட்டு, மிதியுண்டு, அறிவு கெட்டுக்கிடக்கும் நமது சமூகத்தைஒன்றுசேர்த்து ஒருமைப்படுத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதே நமது பண்டிதர்கள் வேலையாக இருக்கவேண்டுமேயல்லாமல், ஆலோசனையில்லா தநமது சமூகத்திற்கு அறிவில் செல்லவிடாத ஏமாற்றுப்பொய்ப் பிரசங்கங்களைச் செய்வதும், தமோகுணத்தூக்கத்தையே விருத்தி செய்யக் கூடிய புராணப் பொய்க்கதைகளைச் சொல்லுவதும், பாமர சனங்களுக்கு எதுருசியென்று இதிகாசங்களைத் தேடிக் கொண்டிருப்பதும், பழைய அந்தகாரநிலையைச் சிறந்ததென்று புகழ்வதும், புராணத்திற்குப் புராணம் சாட்சி யென்று சொல்வதுமான குறுகிய உளத்தின் சஞ்சாரத்திருப்தியே கூடாதென்று சொல்லுகிறேன்.

ஊண், உறக்கம், ஊடல் எல்லா உயிர்களுக்கும் பொது, சமம். வியாதியோ, வயோதிகமோ, மற்றச்சமய சந்தர்ப்ப பேதமோ உண்டானஇடத்தில்தான் அம்மூன்றின் தொழில் தடைப்படும், மற்றெதனுலும்தடைப்படாது. ஞானம், கல்வி, கட்டுப்பாடு முதலியவைகளெல்லாம் அவைகளின் துன்பங்களைப் போக்கவேயாகும். பெண்கள் கற்பைப்பற்றியே பேசப்படுகின்றன. தொன்றுதொட்டு ஆண்கள் பெண்களின்கற்பைக்காப்பதென்றே வழக்கத்திலிருந்து வருகிறது. இது, ஆண்களின் பலத்திற்கும் சுகத்திற்கும் ஏற்பட்டது மட்டுமல்ல, இயற்கையும் இடம் கொடுக்கிறது. சிலமிருகங்களும், பட்சிகளும் பெண்கள் கற்பையே காப்பாற்றுகின்றன. பெண்கள் கற்பைக் காப்பாற்றுவதே இயற்கை, ஒழுங்குக்கும் உலக வாழ்க்கைக்கும் அனுகூலமாக இருக்கிறது. எப்படியிருந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்புஎன்பது ஒன்றுதான். பெண்கள், அன்னிய ஆண்களின்சேர்க்கையில்லாமலிருப்பதே கற்பு எனப்படுகிறது. பெண்களிற் பலர் அன்னிய ஆண்களின் சேர்க்கையில்லாமலே வாழ்ந்தார்கள், இன்றும் வாழ்கிறார்கள். பல சந்தர்ப்பங்கள் அவர்களை வழிதவறி நடக்கச்செய்கிறதேயன்றி கற்பைப்பற்றிப் பெண்களுக்குத் தெரியும். கற்பின்குணம் பெண்கள் கூடவே பிறக்கின்றது. விலங்கு, பறவைகளின் பெண்இனங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்கின்றன, அன்னிய ஆண்களைப் பக்கத்தில் சேர்க்காது, பலாத்காரத்தை எதிர்த்துச் சண்டை போடும். அவைகளுக்கு எந்தப் பண்டிதனும் பிரசங்கம் செய்யவில்லை. சீதை, திரௌபதை, அருந்ததி அவைகளுக்குத் தெரியாது.

கற்பு என்பது ஒரு இரகசிய விஷயம். உலக சிருஷ்டியின் அற்புதத்தில் ஆடிக் கொண்டிருப்பது. உயிருக்கும், இயற்கைக்கும் உலக வாழ்க்கைக்கும் பந்தப்பட்டது. அறிவைவிட ஞானம் உயர்ந்ததென்பதுபோல எல்லாக் குணத்திற்கும் கற்பு மேற்பட்டதன்மை உடையது. அதனால் அதைப்பற்றி விவகரிக்கக் கூடாது. கஞ்சியும் கந்தையுமில்லை, ஆச்சாரி, பூசாரி, ஆண்டான், அடிமை அதிகார ஆக்கினைகள் அதற்குமேல் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன. அதில் பண்டிதன்புத்தி செல்வதில்லை, செல்லுபவர்களிடம் சேர்வதுமில்லை. சும்மாயிருப்பதுமில்லை.

இராமாயணத்தைப் புகழ்வதற்குப் பண்டிதர் சேதுப்பிள்ளை கூட சீதையைத் தூக்கிக்கொண்டு வந்துவிடுகிறாரே! பண்டிதர்கள் சொல்கிறபடி சீதை, திரௌபதை கற்பு காப்பாற்றப்பட்டிருக்கிறதா? கதையைப் பார்க்கையில் அதற்கு நேர் விரோதமாக வல்லவா இருக்கிறது. சீதை

(6-ம் பக்கம் பார்க்க)

---

13-ம் பக்கத் தொடர்ச்சி

அலவன்ஸ் ரூ. 16 சேர்த்தாலும் அவன் வாழ்வு வளம் பெறுது!

ஹையர் எலிமெண்டரி, செகண்டரி வாத்தியார்களுக்கொன்றும் புதிதாகச் சம்பளம் கூட்டிவிடவில்லை. தொழிற் பயிற்சி அலவன்ஸ் எனக் கொடுத்து வந்ததைத்தான் சம்பளத்தோடு சேர்த்துக் கணக்கிடப்பட்டிருக்கிறது. கைத்தொழில் பயிற்சியைப் போன்ற கேலிக் கூத்து வேறொன்றும் இல்லை. சில இடங்களிலே அதற்கான பயிற்சி அளிப்பதற்கென பள்ளிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான பள்ளிகளில், தக்ளியிலும் சர்க்காவிலும் நூல் நூற்கத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறதாம். ஒருமாதப் பயிற்சிக்குப் பிறகு மணி ஒன்றுக்குத் தக்ளியில் 60 கெஜமும், சர்க்காவில் 100 கெஜமுந்தான் நூற்க முடிகிறதாம். இதனை 9—6—47 'ஹிந்து' பத்திரிகையில், நூற்பதில் நம்பிக்கையுள்ள ஒருவர் எழுதியுள்ளார். இது என்ன கூத்து? இதுவா தொழில் பயிற்சி! மந்தி கை மாலையாகப் போய்விட்டது ஆட்சி!

ஆசிரியர்கள் கல்லாதது உலகளவு இருக்கிறது. அவர்கள் கற்க வழி செய்யவேண்டும். மேலும் மேலும் தங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ளாவிட்டால் உலகைத் தெரிந்த ஆசிரியர்களாக அவர்கள் இருக்க முடியாது. ஆசிரியர்கள் என்று சொன்ன அளவிலேயே, அவர்களிடத்தில் மாணவர்களுக்கு மதிப்பு ஏற்பட்டு விடாது. கிழிந்த சட்டையும், பொத்தல் வேஷ்டியும், மங்கிய முகமும், மாணவர்களுக்குக் கிண்டலும் கேலியும் செய்யத் தூண்டு கோலாக அமையும்.

ஆசிரியர்கள் வறுமை, அவர்களோடு மட்டும் போகாது. மாணவச் சிறுர்களையும் தாக்கும். கல்வி வளமாக அமையாது போய்விட்டாலும் பாதகமில்லை. இளம் உள்ளத்தில் இடம் பெறக்கூடாத பண்பாடுகள் பலவும் அமைந்துவிட ஏதுவாகும். பின்னர் அது எம்முறையாலும் தீர்க்க முடியாத நோயாகப் போய் விடும். எனவே ஆசிரியர்கள் சம்பள விஷயம் ஆசிரியர்களை மட்டும் பாதிக்கக்கூடியதல்ல. பொதுமக்களையும் வேறுருபத்தில் தாக்கும். எனவே பொதுமக்கள் தங்கள் சிறுவர்களின் எதிர் காலத்தை முன்னிட்டாவது, ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்த முயலவேண்டும். இல்லையேல், கத்தரி, வெண்டை, முருங்கக்காய், வராட்டி நிலையோடு நமது கல்வியின் போக்கும் நின்றுவிடும் நிலை தான் ஏற்படும்!

எனவே, இந்தச்சம்பள உயர்வு போதும், இதோடு திருப்திப்படு என்று கூறுவது முறையாகுமா?

இலங்கை 15 சதம் மலாய் நாடு 12 காசு

திராவிடநாடு

விலை 2 அணு ஆண்டுசந்தா ரூ7.

# கபர்தார்! திருப்திபடுங்கள்!

★

"டேய்! காத்தான்! தோட்டத்லே என்னடா பயிரிட்டிருக்கா? கத்தரி காச்சிருக்காடா? முருங்கம்பூ பூத்த தாடா? பாப்பார வெண்ட இருக் காடா?"

"இல்லெசாமி!"

"இன்னெடா இல்லெ! தோட்டம் என்ன சுடுகாடாவாடா இருக்கு?"

"எல்லாமிருக்கு சாமி! என்னு வேணுங்க?"

"இளம்பிஞ்சா, இரண்டு மூனு நாளெக்கி ஆகும்படியா இளசா கொஞ்சம் கத்தரிக்கா கொண் டாடா!"

"கொண்டாறன்சாமி!"

"பத்தியத்துக்கு ஆறமாதிரியாஒரு பத்து முருங்கக்கா கொண்டாடா!"

"எடுத்தாறன்சாமி!"

"முத்தலில்லாமெ பார்த்து பால் பிஞ்சாகொஞ்சம்வெண்டபறிச்சா!"

* * *

"டேய்முத்தா! என்னு வராட்டி எடுத்தந்தாச்சா? ஆத்திலேஅடுப்பெ ரிக்க ஒண்ணுமே இல்லேடா."

"இன்னம் காயிலேயாஞ்சாமி. ஈர வராட்டியை எப்படி எரிக்கிறது?"

"போடா! அதிகப்பிரசங்கி, கைநீட்டு. நாளே காலமெ நம்ம ஆத் திலே வராட்டி வந்து சேரணும். போ! ஜாக்ரதை. இல்லெண்ணு தோலே உரிச்சி உப்பை தடவிடு வேன்."

* * *

"ஏண்டா ஏகம்பா! இன்னமாடா துண்டு நெயிஞ்சாவுது? வாத்தியா ருக்கு கொடுக்கணமேனுதானேடா. உங்கஅப்பன் சால்ஜாப்பு சொல்லி கிண்டே வரான். ஏண்டா முழுிக் கிறே? உண்மையைச் சொல்லு."

"இல்லெ சாமி! கட்டாயமா வரப் போற அமாவாசிக்கு கொடுக் கிறதா, உங்ககிட்ட சொல்லச்சொன் ஞருங்க."

"ஆ! உங்களே சொல்லச் சொன் ஞருங்களா? அதான் சொல்னீங்க ளாக்கும்! நீட்டுடாகையை!"

* * *

"டேய்! பட்டை நாமம்! ஆத்துக் காரி, எருமைமாட்டெ கழுவிக்கிட்டு வாடாண்ணு நேத்திக்குச் சொன்னு இல்லடா, சொன்னபடிசெய்தியா?"

"நீங்க சொல்லலேண்ணு குளிப் பாட்டலிங்க."

"நான் சொன்னுத்தான் எஜமான் செய்வார் போலிருக்கு! அடடா! இது தெரியாமே போச்செ இத்தனே நாளா எனக்கு! நீட்டுகையை! நம்ம ஆத்துக்காரிய, யாருண்ணு நெனச்சு கிண்டே! நான் தாண்டா அவ, அவ தாண்டா நான்! பத்திரம்! இனிமெ அவபேச்சுக்கு மறுபேச்சு பேசக் கூடாது. தெரியுமா? போ! மொட்ட எருமையை நண்ணுகழுவி, நீச்ச டிச்சி ஓட்டியா!"

* *

"ஏண்டாமுத்தா! நெத்திஏண்டா பாழடஞ்சி போயிருக்கு?"

"மறந்துட்டனுங்க!"

"மறந்துட்டிங்களா? வயித்துக்கு தின்ன மறந்திங்களா? மூக்குபிடிக்க முழுங்கிட்டுத்தானே வந்திங்க! அது ஒண்ணும் மறக்கலிங்களே!"

"இல்லிங்கோ."

"எதிர்த்தா பேசறே! அடேய் மதுரை, அவன் நெத்தியிலே பட்டையா சாணியைப் பூசடா!"

* * *

"டேய் கிட்டு! நாளேக்கு ஆத்திலே வருஷாப்தியம். அதுக்கு கொஞ்சம் தர்ப்பைவேணும். அதாண்டா, அந்த மரமண்ட இருக்கானே மன்னரு அவனே அழைச்சிகிண்டு போய் கொஞ்சம் பறிச்சா. வேலிகிட்ட போகாதே நீ. தொலவா இருந்து காட்டு. அவன்போய்பறிச்சாருவான். அங்கே பாம்புகீம்பு இருக்கும். நீ கிட்ட போகாதே! தெரிஞ்சுதா, தெரிஞ்சிகோ!"

★

"ஏண்டா! சோழம்! உனக்கு படிப்பு கிடிப்பு வராது. தர்ப்பை யைக்கொளுத்தி ஒன் வாயிலே போட்டாலும் ஒரு அட்சரங்கூட ஒனக்கு வராது. போய் தெய்வ மேன்னு உங்கப்பனுக்கு உதவியா மாடு மேச்சிண்டு இரு."

"அப்பா சேஷா! இந்த உருப் படாதுகளே பாத்துக்க. ஆத்துக் காரி உள்ளே கூப்பிட்டா, என்ன எழவோ, கேட்டுண்டுவரேன்."

* * *

"என்னு பிரதர், இராமு படிக் கிறதையே காணேமே. நீட்டா டிரஸ் பண்ணிக்கிருன். ஒரு நாளேக்காவது சினிமா பாக்கிறது தவர்றதில்லே."

"உன்னேயும் என்னேயுஞ்சொல்லு; அவனுக்கு என்னு பிரதர்? அவங்க கிளாஸ் டீச்சரையே டியூஷன் வச்சு கிட்டு இருக்கிருன். மாசம்பதினஞ்சி ரூபா முள்ளங்கிபத்தேமாதிரிகொடுத் துட்ருன். அவன் பாஸ் பண்றதும் பண்ணுததும் அந்த பணத்தைப் பொருத்து இருக்குது."

"ஓ! அப்படிச் சொல்லு! இப்பல் லவோ புரிஞ்சிது விஷயம்!"

* * *

"என்னு மிஸ்டர் கோபால், ஏது ஷர்ட் ரொம்ப ஜோரா இருக்கே. பி. எம்மா? எவ்வளவு விலையாம்?"

"ஆமாண்டா? பி. எம்லே மட்டும், சரியா கிடைச்சுடுதா?"

"சும்மா சொல்லு மிஸ்டர் எனக்கு ஒண்ணும் வேண்டாம்!"

"நீ கேட்டாத்தான், நான் எங்கே போய் வாங்கறது? நம்ம மாத்த மெடிக்ஸ் வாத்தியார் ஒரு மூணு கஜம் கேட்டுட்டார். அதுக்கேநான், கெஞ்சுகெஞ்சுணு கெஞ்சிப் பார்க்கிறே. அவன் இல்லாத கிராக்கி பண்ணறான்."

"தலை போய்டுமோ! போடா போ! கிடைக்கிலேணு சொன்னா போச்சு."

"தலைபோயிடாது தம்பி தலைவருஷ முடிவிலே அல்லவா, நான் இதன் பலனை அனுபவிக்கணும்."

• • •

"தேவாள்தான் ஆச்சார புருஷா! ரேக்கென்னவா? உமா ஆத்துக்காரா அடஞ்சிருசொகமும்காணலே. என்னமோ எக்சிபிஷனாம், எல்லாரும் போறா. நான்கொரங்கு மாதிரி முக்தக்கிலே குந்திண்டு போறவா வாறவாளெ பாத்துண்டு இருக்கேன்."

"ராம, ராமா! உன்னாலே நான் பட்ற வேதனை சகிக்க முடியல்லே. பட்டர் வேலேயே தேவலே. இந்தப்படிப்பு சொல்லி கொடுக்கிற வேலைக்கு வந்து நான் படற சிரமம் கொஞ்சமில்லடி. அங்கே போனா அந்த வானரங்க தொல்லே. ஆத்துக்குவந்தா உன் அவஸ்தை! என்னதான் என்னை பண்ணச்சொல்றே? அவன் கொடுக்கிற சம்பளம் காலட்சேபத்துக்கே போதாமே கடன் வாங்க வேண்டி இருக்கு. இந்த லட்சணத்திலே நீ எக்சிபிஷண்ணு வேறேசொல்றே."

• • •

"ஏங்க! உங்களைத்தான்! நீங்கவல்லிங்களா தேர் பாக்க? காத்தாலே இருந்து இந்தப் பசங்க தொளைமா தொளைக்கிதுங்க!"

"சீ! சீ!! மூதேவி! நாம் இருக்கிற கேட்டுக்கு தேர் ஒண்ணு தாண்டி கொறச்சல்."

"என்னுங்க! இப்படி ஒரேமுட்டா குதிக்கிறங்களே. இராத்திரில்லாம் என்னென்னமோ பேசினிங்க! இப்ப அதெல்லாம் மறந்துபோச்சுங்களா?"

"ஜாக்கிரதை! தேர் திருவிழாவுக்குண்ணு, அவன் ஒண்ணும் சம்பளம் கொடுக்கலே. போதும் போடி உள்ளே."

★

முதலில் எடுத்துக் காட்டியுள்ளது பழங்கதை. எங்கோ குக்கிராமங்களில் இன்றும் நடைபெறுவது. பின்னைய இரண்டும் சர்வ சாதாரணம். எங்கும் எந்த இடத்திலும் இன்றும் காணக்கூடியது. இந்தப் போக்கு ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல சொந்தம். வறுமைப்பலிபீடத்தில் நிற்கிறவர்களிடமெல்லாம் இதனைத்தான் எதிர்பார்க்க முடியும். "உடுப்பது நான்கு முழம்; உண்பது நாழி" என்ற காலம் மலையேறி விட்டது. வாழ்க்கையின் தேவை அத்துடன் நின்றுவிடவில்லை. காலம் மாற மாற வாழ்க்கையின் தேவையும் பெருகிக் கொண்டே வருகிறது. உண்டாகும்—உண்டாக்கிக்கொண்ட தேவை அனைத்தையும், அனைவராலும் பூர்த்தி செய்துகொள்ள முடிவதில்லை. இல்லாமை அல்ல இதற்குக் காரணம். செல்வத்தைப் பெருக்கும் சாதனம் சிலரிடமே சிக்கிவிட்டதால்தான் இந்தச் சீரழிவு. இதனை மாற்றிடத்தான் வேண்டும். நினைத்ததும் முடியுமா? நாள் பல—ஏன்?—ஆண்டு பல பிடிக்கும். வீரர்கள் பலர் தோன்றவேண்டும், பின் சந்ததியாரின் வாழ்வை வளமாக்க.

கல்வியின் மூலமும், வளர்ச்சியும் குறித்து வான் முட்டப் பேசுவோர் ஏராளம். பயன்பற்றிப்பண்ணிசைப்பர். கல்லாதானைக் கண்ணிலி என்பர். புண்ணிரண்டுடைய முகத்தன் என்பர். இரங்காவது படியென்பர். 'கல் கல்' எனக் கதறுவோர் அதற்கான வகை செய்யார். தங்களுக்குள்ள சொல்லாற்றுந் திறமையை, விளம்பரப்படுத்திக்கொள்ளும் சுந்தரர்கள் இவர்கள்.

கற்க வேண்டியவர் ஒரு பக்கம் இருக்க, கல்வியைப் பயிற்றுவிக்கிறார்களை அவர்கள் நிலை என்ன? 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்பது நல்ல புகழ் மாலைதான். 'கற்பித்தவன் ஒரு பிதா' என்பதும் சரி. இந்தப் புகழ் மாலைகளை அல்ல அவர்கள் விரும்புவது. இவை வெறும் போலிப் பேச்சு. உண்மையை உணர முடியாமல் செய்வதற்காக, எவனோ ஏமாற்றுக்காரன் செய்த சதிச் செயல்.

எட்டுச் சர்க்கரை இனிக்காது. அவர்கள் கண்களிலே ஒளி இல்லை. உடலிலே துளி தசை இல்லை. நெஞ்சிலே உரமில்லை. நோக்கிலே நேர்மை இல்லை. போக்கிலே புதுமை இல்லை. சொல்லிலே துடிதுடிப்பில்லை. நடையிலே பிடியில்லை. பற்களைத் தெரியக் காட்டி, கைகளை முகத்திற் கூட்டி, குறைகளை எடுத்துக்கூறும் ஏழைமதியினை இயல்பாகப் பெற்றுவிட்டனர். பரிதாபம்!

வறுமை குடியிருக்கும் வீட்டில் ஆரம்பத்தில் இன்பவல்லியாக, வாய்த்த மனைவி, காலப்போக்கில் படமெடுத்தாடும் பாம்பாவாள். பிள்ளை குட்டிகள் ஐந்து பத்துக்கணக்கில். பிணி பல பெற்று வளர்க்கும் சிறு பண்ணை அது. பொழுதைப் போக்க—கவர்ச்சியான காட்சியைக் காண—பட்டு பட்டாடை உடுத்த—செவிக் குணவளிக்க—கற்றதைச் சிறப்பிக்க—அறிவை வளர்க்க — ஆற்றலைப் பெருக்க—உடலை வளர்க்க வேறு சாதனம், வசதி இல்லை. இவ்வளவாலும் ஏற்படும் இன்பத்தை அடைய ஒரே சாதனந்தான் உண்டு. அலங்காரவல்லிதான், இந்த நஷ்டத்தை ஈடு செய்யவேண்டும். புத்தீசல் போலப் பிள்ளைகள் பல பிறந்தது தான் விளைவு.

"கண்மணி, கண்மணியே" எனும் அன்புச் சொற்கள் ஒலித்த இல்லத்தில், "கழுதையே, காமாட்டியே" எனும் போராட்டப் பேச்சு வலுக்கும். அவரின்கைவண்ணம், அம்மையாரின் கன்னத்தைச் சிவப்பேறச் செய்யும். பின்னர் எழும் ஒப்பாரி ஓசை தெருக்கோடியில் உறங்குவோரையும் உலுக்கி எழுப்பும். வீட்டில் தான்தோன்றிப்பஞ்சாயத்து அமைந்துவிடும். ஆளுக்கொரு கட்டளை பிறப்பிப்பர். நடந்ததற்குப்பரிகாரம்அது; மூல நோய்க்கு மருந்தல்ல. நோயையும் ஆராயவில்லை; அதற்கான ஆற்றலும் அவர்க்கில்லை. அலட்சியமும் உடன் சேர்ந்தால் உருப்படியான மருத்துவத்திற்கு இடம் ஏது? ஏதோ வந்ததற்குப் பரிகாரம் தேடினோம் என்ற மனச்சாந்தி அவர்களுக்கு; ஆறுதல் கூற உலகில் ஆட்களாவது இருக்கிறதே எனும் திருப்தி இருவருக்கும். பலநாள் பழக்கம்; போக்கிக் கொள்ளவேண்டும் எனும்எண்ணமே முளைக்க இடமில்லாமற் போய்விட்டது. இந்நிலையில் விடுபடப் பாதையேது? புது வாழ்வுதான் ஏது?

மக்களுக்கு, வறுமை அளிக்கும் விருந்து இது. ஆசிரியர்கள் வீடும் இதற்குக் கட்டுப்பட்டதே. ஏற்றத் தாழ்விருக்கலாம் நிகழ்ச்சிகளில். இந்தச் சாயம் தெளிக்கப்படாத ஆசிரியர் வீடுகளே இல்லையெனப் பந்தயம் கட்டிக்கூறலாம். அங்கு வீசும் வறுமை வாடை விரட்டப்

(13-ம் பக்கம் பார்க்க)

# ரங்கோன் ராதா

-சௌமியன்,

அழகுத் தெய்வம்—எவ்வளவு பொருத்தமான பெயர், தாராவுக்கு! அதிலும், ராதா அந்த வேடம் தாங்கியபோது, பொருத்தம், மிக மிகச் சோபையுடன் இருந்தது. முதல் காட்சிக்கும் இரண்டாம் காட்சிக்கும் இடையே, கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது. கல்லூரி நாடகந்தானே, எனவே, சீன் மாற்றம், உடை மாற்றம் போன்ற காரியங்களுக்கு, நேரம் பிடித்தது. சாதாரணமாக, இந்தத் தாமதத்தைத் தவிர்க்க முடியவில்லை. தன் தங்கையின் அறிவுத் திறனைக் கண்டு, பெருமையுடன் வீற்றிருந்த என் நண்பனைக் கண்டேன். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம், ஒன்றும் பேசாமல். மற்றவர்கள் பேசினது, அரைகுறையாகக் காதில் வீழ்ந்தது.

அழகுத் தெய்வம்.

மலர்ந்த தாமரை.

கடும் ஜுரம்.

இந்தப் பெண், யாராவது நாடகக் காரியின் மகளோ!

இப்படிப் பலர் பேசிக்கொண்டனர்.

சாந்திநிகேதனம் — அடையாறு கலா க்ஷேத்திரம் இவைகளைப் பற்றியும் பேச்சு எழுந்தது. ஆனால், அவை கலாமன்றங்கள்; இது ஒரு கல்லூரி—வேறு பல அலுவலுக்கிடையே, தயாரிக்கப்பட்ட நாடகம். அந்த நாடகத்தின் முதல் காட்சி, ரசிகர்களுக்கு, திறமை மிக்க நடிகர்களை, புகழ் பெற்ற கலாமண்டலங்களை நினைவிற்குக் கொண்டுவந்த தென்றால், தாரா நாடக அமைப்பின் விசேஷத்தை விவரிக்க வேண்டுமா!

என்னைப்போலவேபலரும், இரண்டாம் காட்சியைக் காணத் துடித்துக் கொண்டிருந்தனர். முதல் காட்சியைத் தோற்கடித்துவிட்டது இரண்டாவது காட்சி.

பர்ணசாலை. அதன் வெளிப்பக்கம் ஒரு பலகை. அதன்மீது ஒரு வாலிபன். அவனருகே மற்றுமிருவர். தளிர் கொண்டு, வீசுகிறார்கள். வாலிபன் கண்களைத் திறப்பதும் மூடுவதுமாக இருக்கிறான். காட்சியின் துவக்கம் இவ்வண்ணமிருந்தது.

"சந்திரா! சந்திரா! என்னப்பா, பயங் காட்டுகிறாயே." மிகப் பரிவுடன், இருவரில் ஒருவன்பேசுகிறான். சந்திரன் கண்களைத் திறந்து அவனைப் பார்க்கிறான்—பார்வையா அது—விரகதாபத்தை விளக்கும் அருமையான பிரசங்கம்!

வந்துவிட்டார்—வந்துகொண்டே இருக்கிறார்—குரு வருகிறார் என்று கூவியபடி இரண்டோர் சீடர்கள் ஓடி வந்தனர். குருவும் அவர்களைத் தொடர்ந்து வந்தார்—சந்திரனின் உடலைத் தொட்டுப் பார்த்தார்—பிறகு மருந்து என்று கருதிக் கொண்டு, 'குரு வேலையை'ச் செய்தார்.

சொன்னபடி நடப்பதில்லை—காட்டிலே அலைவது—கண்ட கண்ட தடாகங்களிலே புரளுவது—வரவர, சந்திரா! நீ ரொம்பக் கெட்டுவிட்டாய்!

சந்திரன் மீண்டுமோர் முறை, பார்வையால் பேசினான்—இம்முறை சோகம், வெட்கமும் திகைப்பும் கலந்து இருந்தது, அந்தப் பார்வையில்.

இதற்குள், பச்சிலையுடன் வந்து சேர்ந்தான் சீடன். குரு, முறைப்படி அதனைச் சாறு பிழிந்து, சந்திரனுக்குக் கொடுத்துவிட்டு, அவனுடன் துணைக்கு இருக்கப் பச்சிலை கொண்டுவந்தவனை மட்டும் அமர்த்திவிட்டு, மற்றச் சீடர்களை அழைத்துக்கொண்டு, ஆஸ்ரமம் சென்றுவிட்டார். அவர் போன பிறகு, சந்திரன் மெள்ளப் பேசினான்.

"பச்சிலை, நீயா பறித்துவந்தாய்?"

"நானல்ல! நீ யாருக்காகத் தாமரையைப் பறித்து வந்தாயோ, அதே தாரா பறித்துத் தந்தாள் பச்சிலை."

கண்களை மீண்டும் மூடினான்—புன்னகை தவழ்ந்தது.

"நோயுமூட்டினாள் — மருந்தும் தந்தாள்." — துணிந்து கூறினான் அந்த வார்த்தையை, நண்பன்.

"துஷ்டா!" என்றான் சந்திரன்; பேச்சிலே, காரமில்லை—முகத்திலே கோபக்குறியில்லை — குழைவுகூட இலேசாக இருந்தது.

"சந்திரா! நீ இவ்வளவு விரைவிலே மனதைப் பறிகொடுத்துவிடக் கூடியவனென்ற நான் எண்ணினதே இல்லை. உண்மையைக் கூறுகிறேன், என் நண்பனுமிய நீ, ஏக்கம் கொண்டிருக்கிறாயே என்று எண்ணும் போது உன்னிடம் இரக்கம் வருகிறது, என்ற போதிலும், பொதுவாக எண்ணும்போது, குருவை நினைக்கும்போது, உன் பருவத்தைப் பார்க்கும்போது, உன் செயல், எனக்குப் பிரமாதமான கோபத்தை மூட்டுகிறது" என்றான் அந்த நண்பன். தவழும் புன்னகை மறையவில்லை—சந்திரன் நண்பனின் வார்த்தையைத் திருத்தினான்! 'சிந்தனை' — 'செயல் அல்ல'—என்றான்.

"இந்த விதண்டாவாதம் கிடக்கட்டும் சந்திரா! குருபத்னியை...."

"அவளுடைய கணவனா என் குரு — ஆமாம் — அந்தத் தொடர்பு துளியும் கெடவில்லை"

"படித்த பாடங்களின்படி நட. உபநிஷத் காட்டும் உண்மையின்படி நட. நான் அதிக காலம் சகித்துக் கொண்டிருக்க மாட்டேன். ஏற்கனவே நோய்வாய்ப்பட்டுள்ள உன்னை, நான் வேறு வேதனைக்குள்ளாக்குகிறேன் என்று வருத்தப்படாதே, படுகுழியில் விழுமுன்னம் உன்னை எச்சரிக்கிறேன். துரோகச் சிந்தனையை விடு. முடியாவிட்டால், இங்கு படிப்பதையாவது நிறுத்திக் கொண்டு, வேறு இடம் சென்றுவிடு."

"எங்கும் அவள் இருக்கிறாள்!"

"சந்திரா! எது, வேதத்தை இந்த விகார காரியத்துக்குப் பயன் படுத்தப்பார்க்கிறாய்!"

"சொல் விளக்கம் வேண்டாமப்பா. நிலைமை விளக்கம் வேண்டும். பச்சிலையைப் பறித்துத் தரும்போது, தாரா, என்ன .... ...."

"அவளும் பித்துப்பிடித்தவளாகத் தான் இருக்கிறாள்"

"ஆஹா! நண்பா இந்த ஒரு வாசகத்துக்கு நான் என் ஆயுள் உள்ளளவும் உனக்குச்சேவை செய்யலாம் போலிருக்கிறது. என்னைப் பித்தனாக்கியவள், தானும் அதே நிலையில் இருக்கிறாளா! எங்கே தாரா இப்போது! எங்கே என் அழகுத் தெய்வம்!"

(7-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

யிடம் நல்ல குணங்களெல்லாம் போட்டி போடுகின்றன என்று பண்டிதர் சொல்லுகிறார். இராமர் சீதையைக்காட்டிற்கு வரவேண்டாமென்றும், பரதனுடன் இருவென்று சொன்னதும், அதற்குச் சீதை பதிலளித்ததும், பிறகு கானகத்தில் மானைப்பிடித்துக் கொடுக்கச்சொன்னதும், இலட்சுமணன் பேச்சைத் தட்டி இராமரிடம் கொஞ்சினதும், மாரீசனை மான் செத்ததும், அதன் சத்தம் கேட்டு இராமரைத் தேடிப் பார்க்க இலட்சுமணரை வேண்டினதும், அவர் மறுத்ததும், அதற்குச் சீதை சொன்ன சுடுசொல்லும், இலங்கையில் அனுமாரைக்கண்ட சீதை இராமரைப்பற்றிச் சொன்னதும் சீதையின் முக்கியபாகங்கள். இது, எல்லாப் பெண்கள் பேசுவதைக் காட்டிலும் அதிகமாயிருக்க சீதையிடம் எத்தகைய நல்லகுணம் போட்டி போட்டது? பண்டித அதிர்ச்சியில் அழகாகப் பேசிவிட்டால் போதுமா?

உண்மையைத் தெரிவதற்கேகல்வி. அதைப் படிப்பதேபடிப்பு. அந்தப் படிப்பை மறைப்பதே வஞ்சனை மறைக்கப் பலதைப் பேசுவது பண்டிதர் பெருமையுமன்று.

இராமர் காட்டிற்குப் போகையில் சீதையிடமிருந்த எல்லா நகைகளையும் பிராமணர்களுக்கே கொடுத்துவிடச் சொல்ல, அவள் அப்படியே செய்தாளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய நல்ல குணங்கள் நம் பெண்கள் கற்றுக்கொண்டதன் பலன் தான் இன்று நாம் அகப்பையும் சட்டியுமாய் அலைவது.

சீதை ஆதிமூலப்பொருளின் மனைவி. மனித உறுப்பில் உதிக்காமல் மண்ணில் உதித்தவள். இந்தக்கற்பிதமான பெண்ணிடமிருந்து என்ன கற்றுக்கொள்ள முடியும்? எப்படிக் கற்றுக் கொள்வது? இராவணன் பலவான், எதற்கும் அஞ்சாதவன், தான் ஆசை கொண்ட பெண்ணை மடியில்வைத்துக்கொண்டு போனான் என்றால் அந்தப் பெண்ணின் கற்புக் காப்பாற்றப் பட்டிருக்குமா? பிரமமர், பார்வதியின் பாதத்தைப்பார்த்து மோகித்து, ஓமப் புகையை எழுப்பிச்சிவபெருமானின் கண்ணை மறைத்துப் பார்வதியின் முகத்தைக்கண்டு அகத்தியரை உண்டாக்கினாரே. சிவன், விஷ்ணு, ரிஷிகள் முதலானவர்கள் இச்சைப்பட்டதும் பெண்களைக் கட்டிப்பிடித்தார்கள் என்று கதைகள் இருக்கையில் இராவணன் மாத்திரம் எந்த வகையில் துஷ்டன் தூர்த்தனாவான்? அதுவுமன்றி இராமர் சீதைபேரில் சந்தேகப்பட்டு எத்தனை சாட்சிகள் சொல்லியும் தீக்குளிக்கச் செய்துங்கூட ஐயம் தீராமல் காட்டிற்கும் அனுப்பினாரென்பதைப் பண்டிதர்கள் கவனிக்க வேண்டும்.

தனக்கு ஐந்து புருடர்கள் இருந்தும், கர்ணனிடம் தன் மனம் நாடுகிறதென்றும், ஆண்களேயில்லாவிட்டால் பெண்கள் கற்புடையவர்களாயிருப்பார்களென்று திரௌபதை சொன்னதும், அதற்குக்கிருஷ்ணன் ஒப்புக்கொண்டதும் எத்தகையகற்பு என்பதைப் பண்டித சேதுப் பிள்ளை தான் சொல்லவேண்டும், அத்தகைய கற்பின் பிரசங்கத்தை நிறுத்திவிட வேண்டும்,

சீதை மண்ணில் பிறந்தாள்; திரௌபதை நெருப்பில் பிறந்தாள். இதுஉண்மையென வைத்துக்கொண்டாலும் இந்தஇரண்டுபேர்வாழ்க்கை துக்கமும் ஆபாசமுமானது. இராமரோ ஆதிமூலப் பொருள். அந்தப் பொருள் ஒரு பெண்ணுக்குப் புருடனாக இருக்க முடியுமா? எல்லாத் தேசத்துக்கும் ஆதிமூலப் பொருள் ஒன்றுதானே? அது இந்தத் தேசத்தில் மட்டும் ஒரு பெண்ணோடு கூடி வாழ்ந்து வந்தது என்பதில் என்ன உண்மையிருக்க முடியும். கர்ணன், தர்மன், வீமன், அர்ச்சுனன்முதலியவர்கள் சூரியன், எமன், தேவேந்திரன், வாயு முதலியவர்களின் பிள்ளைகளாம். இத்தனை பேரும் ஒரு பெண்ணை வைத்துக்கொண்டு வாழ்ந்தார்களாம். "ஐவருக்கும் பெண்சாதி, அழியாப் பத்தினி" என்று பண்டிதர்கள் பிரசங்கம் செய்தால் பெண்களுக்கு அரை குறையாக இருக்கும் நல்ல எண்ணமும் நலிந்து தானேபோகும்.

இனி ஆதிமூலப் பொருளின் அவதாரமான பரசுராமர், கற்பின் நிர்ணயத்தைப் பற்றிச் சொல்கிறேன். பரசுராமரின் தாயார் தண்ணீருக்குப் போனார்கள். ஆகாயத்தில் கார்த்தவீரியன் பறந்து போகத் தண்ணீரில் அவன் நிழல் தெரிந்தது. அந்த அழகைக் கண்டு ஆச்சரியப்பட, உடனே பதிவிரதா தர்மம் கெட்டுத் தண்ணீர் திரளவில்லை. தகப்பனார் உத்தரவுப்படி பரசுராமர் தன் தாயின் தலையை வெட்டினார். இது அந்த அவதாரத்தின் கற்பின் இலட்சணம். அபூர்வபொருளைக் கண்டால் ஆச்சரியப் படுவது எவர்க்கும் இயற்கை. கார்த்தவீரிய அர்ச்சுனனுக்கு ஆயிரம் தலை, இரண்டாயிரம் கை, அதைப் பார்த்துப் பூதமோ பைசாசமோ என்று அச்சமும், ஆச்சரியமும் அடைந்திருக்கலாம். அதற்குத் தலைவெட்டுவதுதான் பரசுராமர் கற்பின் இலட்சணம். இயற்கைக்கே விரோதம். ஆதிமூலப் பொருளின் அவதாரங்களான இராமன், கிருஷ்ணன், பரசுராமன் ஆகியோரின் கற்பின் தன்மையை எந்தப் பெண்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒப்புக்கொள்ளவும் முடியாது. இந்த மூன்றில் எதை எடுத்துக் கொள்வதென்பதைப் பண்டிதர் சேதுப்பிள்ளை அவர்கள் தான்சொல்ல வேண்டும்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் இந்நான்குகுணங்களே பெண்களுக்குப் பெருமை எனச் சொல்லப்படுகிறது. இந்த நான்கு வகைக் குணங்களும் இன்று தள்ளப்பட்டு வருகின்றன. தள்ளக்கூடியதாகவுமிருக்கின்றன. அச்சம் என்றால் பயம். பெண்கள் எதற்கும் பயப்படக் கூடாது, ஆண்களைப்போலவே எல்லா உத்தியோகங்களையும் வகிக்க வேண்டும், இன்னும் சிப்பாயாக வேண்டும், தற்காப்புக்கு இடுப்பில் பிச்சுவா சொருகிக் கொள்ள வேண்டுமென்கிறார்கள். மடம்—அறியாமை, அறியாமைபோலிருத்தல். இதையும் நீக்கிக் கொண்டார்கள். சங்கங்கள் கூட்டவும் அவைகளில் பேசவும், எழுதவும் நல்ல பயிற்சி பெறவிருக்கிறார்கள். நாணம், வெட்கம். இதை முழுதும் ஒழித்துவிட்டார்கள். படிக்கவும், பாடவும், ஆடவும் பழகிக் கொள்கிறார்கள். பயிர்ப்பு—அருவருப்பு. இன்று மோட்டார், டிராம், ரயில், சினிமா, நாடகம் முதலிய சாதனங்களால் அருவருப்பு அறவே அண்டுவதில்லை. எனவே இவற்றால் பெண்களின் பெருமைகள் எனப்பேசப்பட்ட மேற்கண்ட நான்கு முறைகளும் இன்று தள்ளப்பட்டு விட்டன. தள்ளப்பட்டே தீரும். இனிக் காவியப் பூச்சும், பண்டிதர் பேச்சும் எங்கும் யாருக்கும் உபயோகப்படாது.

5-ம் பக்கத்தொடர்ச்சி

"இதோ வந்துவிட்டேன்" ஆம்! தாராவின் குரல்! ஆனால், சந்திரனின் ஏக்கக் குரலுக்கு அவள் அளித்த பதில் அல்ல. குருவின் கூப்பிடும் சத்தம் கேட்டு, தாரா, பதிலுரைத்தாள் அதுபோல. அதுவரை, அவள், அந்தப் பர்ணசாலையின் பக்கத்திலே இருந்த மலர்ப்புதரிலே மறைந்து கொண்டுதான் இருந்தாள். காதல் நோய், கொண்ட கட்டழகனின் பேச்சைக் காதாரக் கேட்டாள். கட்டளையிடும் உரிமை பெற்ற கணவனின் குரலைக் கேட்டு, ஓடோடிச் சென்றாள். அவள் உள்ளமோ நர்த்தனமாடிற்று. இவ்வளவையும் விளக்க, பேச்சு, பாட்டு ஒன்றும் கிடையாது. தாரா—அதாவது என் ராதா-இங்குமங்கும் ஓடினாள்—இதோ! வந்தேன்! என்று கூவியபடி — புள்ளிமான் போல. நூற்றுக் கணக்கிலே நாங்கள் இருந்தோம் நாடகத்தைக்கண்டு களித்தபடி. ராதாவின் பார்வை, யார் மீதேனும் வீழ்ந்ததோ! இல்லை! எங்கோ சஞ்சரித்தன! என்னென்னமோ பேசின! மூன்றாவது காட்சி ஆரம்பமாயிற்று. தாராவும், குருவும் குடும்ப வாழ்க்கையை எப்படி நடத்தி வந்தனர் என்பதைவிளக்கும் காட்சி. அதையும் என் ராதா, அருமையான முறையிலே தான் அமைத்திருந்தாள். இருவருக்குள் நடைபெறும் சம்பாஷணைகளின் மூலம், இருவரும்வேறுவேறுஉலகிலே, சஞ்சரித்து வருவதை விளக்கினாள். குரு, தன் எதிரே ஒரு குவியல் ஓலைச் சுவடிகளை வைத்துக் கொண்டிருந்தார்— ஒன்றைப் பிரித்துப் படிப்பதும், அதைப்படித்துக் கொண்டிருக்கும் போதே ஏதோ புது யோசனை கொண்டவராய், வேறோர் சுவடியை அவசரமாக எடுத்துப் பிரித்துப் படிப்பதும், விளக்கம் பெற்று மகிழ்வதுமாக வீற்றிருந்தார்—அவருக்கு அருகே, பலவிதமான மலர்களைத் தன் எதிரே குவியலாக வைத்துக் கொண்டு, தாரா, பூத்தொடுத்துக் கொண்டிருந்தாள்— இடையிடையே நல்ல மல்லி, அழகிய இருவாட்சி, இவைகளை, மாலையுடன் இணைக்காமல், தனியாக எடுத்து வைத்து அழகு பார்ப்பதுமாக, அவள் காணப்பட்டாள். ஒவ்வோர் சமயம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர், இருவரும் ஏதேனும் பேச வேண்டும் என்று எண்ணி, என்ன பேசுவது என்று தெரியாததால் திகைத்துக் கொண்டிருந்த காட்சி, சிறந்த நகைச்சுவைப் பகுதியாக இருந்தது. இந்தத் திகைப்பைப் போக்க, குரு, மௌனப் படிப்பு முறையை மாற்றி, உரத்த குரலிலே படிக்கலானார், சுலோகத்தை.

"வசந்தருது மனமோகனம்அளிக்குமோ? என்று கேட்ட ஸ்ரீ மகாலட்சுமியை, ஸ்ரீமன் நாராயணமூர்த்தி பார்த்து, ஹே! பிரியநாயகி! மனதுக்கு இசைந்தவளும், மனோஹரியும், மாசற்ற கற்பினளுமான மனைவியுடன் கூடிவாழும் பேறு பெற்றவனுக்கு, வசந்தருது, ஆண்டுக்கொரு முறை அல்ல, ஆண்டு முழுவதும், ஆயுள் முழுவதும் உண்டு என்று பதில் கூற, லட்சுமி தேவியார், தன் பர்த்தாவின் பாகுமொழியை உண்டு மயங்கினவளாய், அவருடைய மார்பிலே சாய்ந்து கொண்டாள்"

குரு, சுலோகத்தை ஒருமுறைக்கு இருமுறை, பதம் பதமாகப் பிரித்து, படிக்கும் போதே பொருள் விளங்கக் கூடிய விதமாகப் படித்துக் காட்டி, தாரா, தன் கருத்தைக் கூறுவாள், அதை ஒட்டிப் பேசத்தொடங்கலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். தாராவோ, குருவின் கருத்தை அறிந்து கொண்டும், கவனியாதவள் போலிருந்து விட்டாள். ஆனால் சுலோகத்தின் பொருளைக் கண்டு ரசித்தாள் என்பது அவளுடைய முகபாவத்தில் அழகாக விளங்கிற்று. கொஞ்சநேர மௌனத்துக்குப் பிறகு, குருதேவர், தன் கருத்துக் கேற்ற வழிப்படி தாரா வராமற் போய்விட்டாலும், அவளுடைய கருத்தின் வழிப்படி சென்றாவது அவளிடம் பேசுவோம் என்று எண்ணினவராய்,

"தாரா! முல்லைக்கும் இருவாட்சிக்கும், பார்த்த உடனே வித்தியாசம் தெரிந்து விடுகிறதோ?" என்று ஓர் கேள்வி கேட்டார். தாரா அதற்குப் பதில் கூறாமல், முல்லையையும் இருவாட்சியையும் மாறி மாறிப் பார்த்தாள். குருவுக்குச் சலிப்பும் கோபமும் வந்து விட்டது.

"தாரே! உனக்கு, மலர்களிடம் பிரியம் அதிகம் இருக்கலாம்— இருக்கவேண்டியது தான்—மங்கையும் மலரும் இணை பிரியாத் தோழர்கள், ஆயினும், நான், எப்போதும் மனச் சந்துஷ்டிக்காக உன்னிடம் பேசத்துடித்தாலும் அப்போதும், நீ மௌன உதாசீனம் செய்கிறாயே இது சரியாகுமா?" என்று கேட்டார், அவருடைய பேச்சு, கோபத்வனியில் ஆரம்பமாகி, சோக ரசத்தில் போய் முடிந்தது. தாரா இதற்கு மட்டும் பதிலுரைத்தாள்.

"நான் பேசுவது தங்கள் மனச் சஞ்சலத்தைப் போக்கிச் சந்துஷ்டியைத் தரும் என்று கூறுகிறீரே, இது எனக்கு நிரம்பச் சந்தோஷம் அளிக்கிறது" என்றாள்.

"அது தெரிகிறது — வியாக்யானம். என் மனச் சந்துஷ்டிக்காக வேனும், ஏன் என்னிடம் பேசக் கூடாது" என்றுகோபமாகவே கேட்டார். தாரா, பதிலுக்குக் கோபித்துக்கொள்ளவில்லை. மலர்க்கூடையை அவரிடம் கொண்டுவந்து கொடுத்து விட்டு, "அவசரமாக வெளியே சென்று வரவேண்டும்—தயவுசெய்து பூத்தொடுத்துக்கொண்டு இருங்கள்." என்று கூறிவிட்டு வெளியே போகத் தயாரானாள். அவளிடம் கோபம் கொண்டிருந்த குருதேவர், தாராவின் ஒரே ஒரு புன்னகையால், திருப்தி அடைந்துவிட்டார். திருப்தி அடைந்தது மட்டுமல்ல, தேன் உண்ட வண்டென மயங்கினார். குழந்தைபோலப் பேசலானார். "தாரே! மலர் மாலை தொடுத்துத் தருகிறேன் நல்ல முறையிலே. ஆனால், நீ எங்கே போகிறாய், இவ்வளவு அவசரமாக, இந்த நேரத்தில்?" என்று கேட்டார்.

"ஒரு அருமையான பச்சிலை இருக்கிறது பக்கத்துத் தோட்டத்து வேலியில், அதைச் சாறு பிழிந்து கொடுத்தால், உடனே, சந்திரனின் காய்ச்சல் நின்றுவிடும்." என்றாள்— கூறிக்கொண்டே வெளியே சென்றாள். (தொடரும்)

**வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு**

25—6—47ல் குன்றத்தூர் வட திருநாகேஸ்வரம் மணமகள் இல்லத்தில்,

**தோழர் விநாயகத்திற்கும்**

தோழியர்

**சகுந்தலாவிற்கும்**

வாழ்க்கை ஒப்பந்தம், தோழர் சி. என். அண்ணாத்துரை, அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இங்ஙனம்,
**T. M. நடராசன்.**

திராவிட நாடு
காஞ்சி] 15—6—47 [ஞாயிறு

# பழியும்--பலமும்

(1)

உலகிலே வேறு எந்தத்திட்டத்துக்கும் ஏற்பட்டிராத அளவு, எதிர்ப்பு, பாகிஸ்தானுக்குஇருந்தது. அந்த எதிர்ப்பை முன்னின்று நடத்தியவரோ, சாமான்யரல்ல-மகாத்மா. அவருடைய பர்ணசாலைக்குள் நுழைவதைப்'பாக்கியம்' என்று கருதிய-கருதும்—மன்னர்கள் உண்டு.

கனவு கண்டார் ஒரு கோடீஸ்வரர், காந்தியார் பணம் கேட்டதாக—உடனே ஓடோடிச் சென்று காணிக்கை செலுத்தினர் அவருக்கு. அவருடைய புகழ் பாரெங்கும் பரவிற்று—பரங்கியரிலே பலருங்கூட அவருக்குப்பராக்குக் கூறுவோராயினர்.

அவருடைய சொல்கேட்டுத் தியாகத்தீயிலே குதிக்க இலட்சக்கணக்கானமக்கள் இருந்தனர் — இன்றும் உள்ளனர்.

அவருடைய நடைஉடை பாவனை, எவர் உள்ளத்திலும், அன்பைக் கிளறிவிடக்கூடியது. போருக்குப் பயந்தவரல்ல. படைபலமற்றவரல்ல, அவருடைய 'வாரிசு'வுக்கே வல்லரசுகளை வளையவைக்கும் வல்லமை ஏற்பட்டது என்றால், அவருடைய வல்லமையைவிவரிக்கத்தேவையில்லை—குறைத்து மதிப்பிடுவது பிரச்னையின்பேருண்மையைமறைப்பதாகும். நாள்தோறும், இங்கு மட்டுமல்ல, ஏகாதிபத்யத்தலைநகரில், பண அரசாம் அமெரிக்காவின் தலைநகரில், பாரெங்கும், அவருடைய அறிவாற்றல், அன்புடைமை,ஆகியவைபற்றிய சொல்லோவியம் தீட்டிக் காட்டப்பட்டது. மாவீரன் லெனின், சீனரட்சகன் சன்யாட்சென், துருக்கிதீரன் முஸ்தபாகமால், ஆகிய எவருக்கும் இவருக்குக்கிடைத்த அளவு செல்வாக்கு, பலம், வசதி, வாய்ப்பு கிடைத்ததில்லை-இனி ஒருவருக்குக் கிடைக்குமா என்பதும் சந்தேகம். ஆம்! அவருடைய ஆற்றலின் முன்பு ஆங்கில ஏகாதிபத்தியம் அச்சுவேறு ஆணிவேறாகப் போகும் என்று வீரவாலிபர்கள்எண்ணினதில்தவறில்லை. ஆனால், அவர்தோற்றார்! தோற்கடிக்கப்பட்டார் — வேறோர் மகாத்மாவாலா, ரிஷியாலா-இல்லை, இல்லை-ஒரு சாதாரண அரசியல் தலைவரால். மகாத்மாவைத் தோற்கடித்தவர் ஒரு யூகாத்மா!

நாம், கேலிக்கோ கண்டனத்துக்கோ அல்ல, இதனை எழுதுவது—"மகாத்மா" தோற்றுவிட்டார்என்று கூறி இந்தமட்டரகங்கள்கைகொட்டி நகைக்கவும் காலம்பச்சே என்றுகாங்கிரஸ் நண்பர்கள் கண் கசங்கி நிற்க வேண்டும் என்ற அற்பசந்தோஷத்துக்காகவுமல்ல இதனை எழுதுவது. ஒரு திட்டத்தை எவ்வளவு பலம் கொண்டு, எத்தகைய பலம், வாய்ந்த தலைவரின் துணைகொண்டு, எவ்வளவு விடாப்பிடியாக, முறைப்படி, முழு மூச்சுடன் எதிர்க்கவேண்டுமோ—எதிர்க்கமுடியுமோ, அவ்வளவும் செய்து பார்த்தும், திட்டத்தைத் தகர்க்கமுடியவில்லை, என்ற உண்மை வேதனை தருவதாகத் தோன்றக்கூடும், ஆனால் அந்த உண்மையைக் காண மறுப்பது,மேலும் வேதனைக்கு வித்திடுவதாகும் — அந்த விபத்துக் கூடாது என்பதற்காகவே,எவ்வளவு ஆற்றலுள்ளவரைக்கொண்டு போர் நடத்தி, தோல்விகிடைத்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறோம்.

மகாத்மாவுக்கும் யூகாத்மாவுக்கும் நடந்த போரில், அரை ஆடை அணிந்த அண்ணலுக்கும் ஆங்கில உடைதரித்தவருக்கும்இடையேநடந்த போரில், துறவிக்கோலத்திலிருப்போருக்கும் துரைமார் கோலத்திலிருப்போருக்கும்இடையேநடைபெற்ற போரில், அந்தராத்மாவிடம் கலந்து பேசும் ஆஸ்ரம அரசியல் வாதிக்கும் சட்டநுணுக்கம் தெரிந்த அரசியல் வாதிக்கும் இடையே நடந்தபோரில், வெற்றி, யூகாத்மாவுக்குத்தான். கனல் கக்கினர்—திட்டம் அதனால் தீய்ந்துபோகவில்லை. சபித்தனர் — மிரட்டினர் — போர் முழக்கமிட்டனர்—திட்டம் தகர்க்கப்படவில்லை. ஏககாலத்தில் நூற்றுக்கணக்கான பீரங்கிகள்குண்டுகளைவீச,கோட்டை தூளியும் சரியாமல்இருப்பதுபோன்ற நிலை.

மகாத்மாவல்லவா, பாகிஸ்தானை எதிர்க்கிறார் என்று, ஜனாப்ஜின்னா, கையிலே கொரானுடன் வந்து நின்றாரா? இல்லை! ஒருமுறை படத்திலே கண்டோம்—சிகரெட்டும் கையுமாகக் காந்தியார் பக்கம்நின்று அவர் பேசிக்கொண்டிருந்த காட்சியை. ஏழை எளியவர் போன்ற கோலத்தில் இருந்தால் தான், பாமரமக்களின் பாசத்தைப் பெறமுடியும், அவர்களோ ஒரு மகாத்மாவின் மோகனப் புன்னகையிலே சொக்கிக் கிடக்கிறார்கள் என்று எண்ணி, தமது போக்கை மாற்றிக் காட்டினாரா? இல்லை. பம்பாயிலுள்ள தமது மனோஹர மாளிகையைக் கண்டால், செச்சே! இவர் ஒரு பிரபு! பிரபுவுக்கு எங்கிருந்து ஏழையிடம் அன்பு இருக்கும் என்று எண்ணி மக்கள் தன்னைப் பின்தொடர மறுத்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணி, மாளிகையை விட்டுவிட்டு, மாந்தோப்பில் பர்ணசாலை ஏற்படுத்திக்கொண்டாரா? அதுவுமில்லை. எட்டுமுறை சிறைசென்றேன், கொட்டுமுரசு! என்று கூறினவரா? இல்லை! சிறைபுகவில்லை. செல்வத்தைத் துறக்கவில்லை, சிறைபுகவில்லை அற்புதம் புரிபவர் என்று சொல்லிக்கொள்ளவில்லை, ஆயினும் அவர் வென்றார். ஜனாப் ஜின்னா கேட்டதைப் பெற்றுவிட்டார் — இனிநாட்டிலே நலம் பெருகுமாக! என்று மகாத்மாவே கூறக் கேட்கிறோம்.

நெரித்த புருவத்துடன் நிற்பதற்கோ, கோபத்தைக் கொட்டுவதற்கோ, இந்தச் சம்பவத்தைப்பயன்படுத்திக் கொண்டால், எதிர்காலத்திலும் இடர்மிகும். உண்மையைக் காணக்கூசவேண்டாம். ஏன் அங்ஙனம் நேரிட்டது? எப்படிக் கிடைத்தது அந்த வெற்றி—இந்தஆராய்ச்சி தேவை.—அவசரமாகத் தேவை.

நாலாந்தர ஐந்தாந்தர ரகத்திலுள்ள அரசியல் வாதிகள் மட்டுமே, ஜனாப் ஜின்னாவின் வெற்றிக்குக் காரணம், பிரிட்டிஷ்துணை என்று கூறுவர்—சுவரொட்டிமூலம் அரசியலைத் தெரிந்து கொள்பவர்கள், அந்த வாதத்தினால் திருப்தியும் அடைவர். அத்தகையவர்கள் இருக்கும் திக்கு நோக்கிக்கூட அல்ல இந்த நமது திருமுகம்—சிந்திக்கும் பண்புள்ளவர்களுக்குக். நமது வாழ்நாளிலே ஒரு மகாத்மாவின் முயற்சி தோற்கக் கண்டோம், காரணம் என்ன? பலமிருந்தும் படை இருந்தும், பாரெங்கும் துணை இருந்தும், தோல்வி! பலமற்றவரிடம் நடத்திய போரில்—தியாகத்தின் முத்திரை பொறிக்கப்படும் இடம் என்று கருதப்படும் சிறை புகாதவரிடம் நடத்திய போரில்! ஏன் நேரிட்டது? எப்படி நேரிட்டது? இது ஆராய்ச்சிக்

குரியது—எதிர்கால அரசியல் நிலையில் இடர் வராதிருக்க இந்த ஆராய்ச்சி தேவை.

ஏகாதிபத்யக்கூலி என்ற ஏளனச் சொல், ஏதோ உளறுகிறார் என்ற கேலிச்சொல், ஹிட்லர் என்றவசைமொழி, என்னவெல்லாமோ வீசியாயிற்று. இதுவரை ஜனாப்ஜின்னா மீது பத்திரிகைகள் வீசிய வசைமொழிகளைத் தொகுத்தால், அகராதி அளவாகும் ஏடு! எவ்வளவு கேவலமான பழிகள் சுமத்தப்பட்டன! எத்தனை இழிவான குற்றங்களைச் சாட்டினர்! என்னென்ன வகையான கேலிச்சித்திரங்கள்! பிசாசுஉருவில், ஹிட்லர் உருவில், சர்ச்சிலின் பாதத்தைக் கும்பிடுவதுபோல, பாதையில் படுத்துக்கிடப்பதுபோல, ரயில் எதிரே உட்காருவதுபோல, சுயராஜ்ய ரதத்தை பின்னுக்கு இழுப்பதுபோல — ஓவியங்கள் ஓராயிரம் வகைஇருக்கும்! ஒரு தலைவரை, ஒழிக்க, வசையும் கேலிச்சித்திரமும் போதுமென்றால், ஜனாப் ஜின்னாவின் முயற்சி துவக்கத்திலேயேமுறிந்துபோயிருக்கவேண்டும். ஆனால் இவ்வளவு தாக்குதலையும் அந்தத் தலைவரால் தாங்கமுடிந்தது—ஆச்சரியம் அது அல்ல; தாக்கினவர்கள் அலுத்தனர், தாக்குண்டவர் வெற்றி பெற்றார்! எப்படி?

> **துண்டுதுண்டாக எங்களைவெட்டுவதானாலும் சரி, எங்கள் பிறப்புரிமையைப் பெறப் போரிடத் தயங்கோம்.**
>
> **நாற்பது கோடி மக்கள் நாங்கள் நாய்களோ பன்றி சேய்களோ!**
>
> **தூக்கு மேடைக்கேனும் போவோம் துரைமாரின் பாதத்தைத் தாங்கோம்.**
>
> **சுயராஜ்யம் எமது பிறப்புரிமை அதைப் பெற்றே தீருவோம்.**

இவை போன்ற வீர முழக்கங்களை, வேட்டுகளாக்கியே, விடுதலைப் போர் துவக்கப்பட்டது. இந்த வீரமொழிகள் வீண்போகவில்லை—விடுதலை கிடைத்தது—ஆங்கிலரிடமிருந்து இந்தியருக்கு என்ற அளவிலே மட்டுமல்ல, ஆதிக்கக்காரர்களிடமிருந்து அதனால் அல்லற்படுவோருக்கெல்லாம்!

துவக்கத்திலே இந்த வீரவுரைகள் தூங்கிக்கிடந்த இந்தத் துணைக்கண்டத்து மக்களைத்தட்டி எழுப்பி, துரைமாரின் துப்பாக்கிக்கு மார் காட்டும் நிலையை உண்டாக்கிற்று. இந்தச்சமயம் ஏற்பட்ட சூழ்நிலை, மனப்பாங்கு, விடுதலை வேட்கை, தியாகத்தீ, 'இந்தியர்கள்' என்ற பொதுப்பெயரால் அனைவருக்கும் புத்துயிர் அளித்தது—பத்துக்கோடி முஸ்லீம்களுக்கும் சேர்த்து!

இரண்டாம் கட்டத்தின்போது, நமது மக்கள், குண்டு தளவாடங்கள் கொண்டு ஆட்சிபுரியும் வெள்ளைக்காரனை விரட்ட நம்மால் ஆகுமா என்று உள்ளம் சோர்ந்தபோது, உரம் ஊட்ட, விடுதலைப்போர் நடாத்தியவர்கள், "நீங்கள் சாமான்யர்களல்ல! வீரர்வழிவந்தவர்! வெற்றி பலகண்டவர்! முடிதரித்தவர்!" என்று பொதுப்படையாகப் பேசிவிட்டு, பிறகு சித்திரநடைக்காக என்று எண்ணிக்கொண்டு, இந்த துணைக்கண்டத்து முன்னாள் வீரர்களின் காதைகளைக் கவனத்துக்குக்கொண்டு வந்தனர். அதுபோது, அசோகனை மட்டுமா, அக்பரையும், குப்தபரம்பரையை மட்டுமா மொகலாய வம்சத்தையும், கவனப்படுத்தலாயினர். இந்தியருக்கும் ஆங்கிலருக்கும்போர், விடுதலைக்காக, என்றபோது, முன்னாள் வீரர்களின் காதைகள் ஊட்டிய உணர்ச்சி, பகத்சிங்குகளை, பாஞ்சால சிங்கங்களை, கப்பலோட்டியதமிழர்களை, உண்டாக்கிற்று—ஆனால் அதேபோது பத்துக்கோடி இஸ்லாமியருக்கும் தமது பண்டைப்பெருமையை மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்திற்று. வான் முட்டும் கோபுரங்களைக் காட்டிப் பண்டைப் பெருமையை நினைவூட்டினபோது, பார்புகழும் தாஜ்மஹாலைக் கவனப்படுத்தாது இருக்கமுடியுமா! அந்த ஒப்பற்ற சிற்பச்சிறப்பைக் கவனப்படுத்தியபிறகு இஸ்லாமியருக்குச் சிறுவாழ்வு பிடிக்குமா?

இந்துவென்றும் முஸ்லீமென்றும் எமக்குள் பேதமில்லை, என்று ஒற்றுமைக் கீதம் பாடினர் விடுதலைப்படையினர். அதற்கு அவசியம் இருந்தது. காந்தியார், அந்த ஒற்றுமையின் சிறந்த அறிகுறியைக் காட்டவேண்டுமென்று, கிலாபத் இயக்கத்திலே கூட அக்கரை காட்டினார்—அலி சகோதரர்களுடன் பவனி வந்தார்—வந்தேமாதரத்துடனல்ல அல்லாஹு அக்பருடன்தான், சொற்பொழிவுகள் முடிவுறும். இது தேசிய வளர்ச்சிக்குத் தேவைப்பட்டது. அந்த வளர்ச்சி, பத்துக் கோடி முஸ்லீம்களுக்கும் பலமூட்டத் தவறவில்லை.

தேசிய சக்தியை வளர்க்க, காங்கிரசின் பேரால் செய்யப்பட்ட ஒவ்வொரு முயற்சியும், ஏகாதிபத்ய எதிர்ப்புணர்ச்சியை பலப்படுத்தியதோடு நின்றுவிடவில்லை, இஸ்லாமிய இன உணர்ச்சிக்கும் உற்ற துணையாக அமைந்தது.

**நாடாண்ட நாம் அன்னியரின் அடிமையாக இருப்பதா?**

**நாம் உணர்ச்சியற்ற, உரிமையின் அருமை அறியாத மாமிசப் பிண்டங்களா?**

என்று தேசிய மேடைகளில் கேட்கப்பட்டது. ஆம்! அதே கேள்வி, பிறகு இஸ்லாமியர் மனதிலே ஆழப் பதிந்தும் விட்டது. நாம் பத்துக் கோடி, இந்துக்களோ முப்பது! நாமும் அவர்களும் சேர்ந்து ஆள்வது என்றால், மெஜாரிடி பலம் அவர்களுக்கு, நாம் அவர்கள் இட்ட பணியைச் செய்யும் நிலைதான் பெற்றாக வேண்டும்—இது உரிமையாகுமா, இது நமது பண்டைப் பெருமைக்கு இஸ்லாமியப் பண்புக்கு உகந்ததாகுமா! என்று தங்களைத் தாங்களே கேட்டுக்கொண்டனர். பாகிஸ்தான் கருவில் உலவிற்று!

**அன்னியன் நம்மை அடிமைப் படுத்தி, என்னென்ன பாடுபடுத்துகிறான் பாருங்கள்!**

**அதிகாரம் அவனிடம்! வியாபாரம் அவனிடம்! செல்வம் அவனிடம்! நாம் உழைக்கிறோம், அவன் சுறண்டுகிறான்.**

இந்தத் தெளிவுரையும் தேசியப்பிரசாரந்தான். இந்த உரை, வெள்ளையரின் இலாபவேட்டைக்கு முடிவு கட்டியாக வேண்டும் என்ற எண்ணத்தை மட்டுமா தந்தது! இலாப வேட்டையை யார் நடத்தினாலும், அவர்களின் கொட்டத்தை அடக்கியாக வேண்டும், என்ற எண்ணத்தையே தந்தது. இந்த எண்ணம் வளர்ந்த வேகத்தைவிட விரைவாக, இந்து முதலாளித்வம் வளர்ந்தது! ஆகவே பரங்கிமீது வீசப்பட்ட பாணம், பிறகு பனியா மீதும் வீசப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தேசியத் தாக்குதலால், துரைமார்களின் கொட்டம் சரியச் சரிய, முஸ்லீம்களின் கண்முன்பு, சரியாத பனியாக் கோட்டை விளக்கமாகத் தெரியலாயிற்று. எனவே அவர்கள்,

**விழலுக்கு நீர் பாய்ச்ச மாட்டோம்**

வீணருக்கு உழைத்துடலம்
தேயமாட்டோம்

என்ற கீத உணர்ச்சியைப் பணியாக்களின் பாசறைக்குச் செலுத்தினர். சுருங்கக் கூறவேண்டுமானால், தேசியம் திரட்டிய மகத்தான சக்தி, நாட்டு மக்களைப் போர்வீரர்களாக்கிய சக்தி, தியாகிகளை உண்டாக்கிய சக்தி, வெள்ளை ஏகாதிபத்ய ஒழிப்புக்கு மட்டும் பயன்பட்டு, பிறகு பட்டுப்போகவில்லை. அதே உணர்ச்சி, இஸ்லாமிய உள்ளத்திலே அதுவரை உறங்கிக்கிடந்த உரிமை வேட்கையைத் தட்டி எழுப்பிற்று. அவர்கள் உள்ளங்களிலே பகத்சிங்குகள், லஜபதிகள், குடி புகுந்தனர். அவர்கள் தங்கள் விடுதலைப் போருக்குத் தயாராகிவிட்டனர்.

ஒரு மகாத்மா கிளம்பி, ஓயாமல் சிறை சென்று, கடவுள் வழி காட்டுகிறார் என்று பேசி, உறங்கிக் கிடந்தவர்களை, அணி வகுத்திடும் ஆரம்ப காரியத்தைச் செய்யத் தேவைப்பட்டார். பிறகோ! அணி வகுப்பிலே, ஒரு பிரிவை அழைத்து, "ஆமப்பா தம்பி! ஆற்றலுள்ளவன் தானப்பா நீ! ஆங்கிலரை ஒழிக்கத்தான் வேண்டுமப்பா! ஆனால் அதன்பின் உன்நிலை என்ன என்பதை யோசித்துப்பாரப்பா!" என்று சூட்சமத்தை எடுத்துக் காட்டவேண்டிய, யூகம் தெரிந்த ஒரு தலைவர் தேவைப்பட்டார். அவர்தான் ஜின்னா! அவருக்காகக் காந்தியார் ஏற்கனவே பல ஆண்டுகள் வேலை செய்துவந்தார் —ஆனால் அவருக்காகத்தான் என்பதை அறியாமல்! கொஞ்சக்காலத்துக்குப் பிறகே, காந்தியாருக்கு, சூட்சமம் தெரியலாயிற்று. நாமூட்டும் உரிமைத் தீ, இஸ்லாமிய ஜோதியாகவும் மாறக்கூடுமே என்று எண்ணினார். அந்த எண்ணம் தோன்றிய பிறகு, அவர் இராம ராஜ்யத்தைப் பற்றிப் பேசலானார். எதை அடக்க அவர் இராம ராஜ்யத்தைப் பேசினாரோ, அந்த இஸ்லாமிய இன உணர்ச்சி, இதன்பயனாகப் பலமடங்கு அதிகப்பட்டது.

"இராமராஜ்யம்! இராமராஜ்யம்! நியாயம். இராமனைத் தெய்வமாகக் கொண்டாடும் இந்துக்களுக்கு இராம ராஜ்யம் தேவை — அது அவர்கள் உரிமை. அதை அடைய அவர்கள் பாடுபட்டுத்தான் வேண்டும். ஆனால் நாம்? நமக்கு ராம் அல்லவே, ரஹீம் அல்லவா, வழிபடு பொருள்? நமக்கு ராமராஜ்யம், எப்படிப் பொருந்தும். நாம் நமது ராஜ்யத்தை —பாகிஸ்தானைப் பெறப் பாடுபடவேண்டும். இந்துக்களுக்கு இராம ராஜ்யம், இஸ்லாமியர்களுக்கு பாகிஸ்தானம்—இதுவே நியாயம் என்று, முஸ்லீம்கள் தீர்மானித்தனர். ஆகவே தேசீயப் பிரசாரம் வலுக்க வலுக்க இஸ்லாமியர்களுக்குத் தங்கள் உரிமை உணர்ச்சி வலுத்ததோ, அதைப் பெறும் சக்தியும் வலுவடைந்ததோ, அதுபோலவே, ராமராஜ்யத்தைப் பற்றி 'மகாத்மா' புகழப்புகழ, ரஹீம் மீது முஸ்லீம்களுக்கு நினைவு வேக வேகமாகச் சென்றது. மகாத்மாவின் புகழ் ஓங்கிற்று, இந்துக்களின் தலைவர் இந்துக்களின் முறைப்படி, துறவுக்கோலம் பூண்டு, ஆஸ்ரமம் அமைத்துக் கொண்டு, அந்தராத்மாவுடன் அளவளாவி, இராம இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் பாடுபடுகிறார், நமக்கும் ராஜ்யம் வேண்டும், அது நமது மார்க்க போதனைக்கு உகந்ததாக இருக்கவேண்டும், அதனைப் பெற்றுத் தரத்தக்க ஒரு தலைவர் வேண்டும் என்று முஸ்லீம் இனம், தனது தலைவனைத் தேடலாயிற்று. அந்த மார்க்கம், அற்புதம் செய்பவர்களை அல்ல, நம்பவேண்டுமென்று கூறுவது. எனவே அவர்கள், துறவியை அல்ல, மகாத்மாவை அல்ல, விடுதலைப் போரை வகை அறிந்து நடத்தக்கூடிய தலைவரைத் தேடினர்—ஜனாப் ஜின்னாவைக் கண்டனர். ஜனாப்ஜின்னா, நாடு, உரிமைப் போருக்குப் பக்குவமான நிலையில் இருப்பதைக் கண்டார், தனது இனமக்களின் இருதய கீதம் இதுவெனத் தெரிந்து கொண்டார். அது மட்டுமல்ல! மகத்தான தேசிய பலம் தம்மிடம் இருக்கிறது. அது இஸ்லாமியருக்கு இல்லை என்று தவறான கணக்குடன் வேலை செய்கிறார்கள் காங்கிரசார் என்பதைக் கண்டு கொண்டார். யூகத்துடன் பணியாற்றினார், வென்றார். எந்தக் கண்டனக் குண்டுகள் அவரைத் தாக்கித் தகர்க்கும் என்று கருதிக்கொண்டு அவர் மீது வீசினார்களோ, அதே குண்டுகள், அவருக்கு, ஆற்றலை அளிக்கும் அருமருந்து ஆயிற்று!

"இஸ்லாமியத் தோழர்களே! என் இனத்தவர்களே! இதோ என்னைக் காணுங்கள் வசைவு மாலைக் கழுத்திலே! மாற்றாரின் ஆச்சரியச் சொற்கள் பாரிலே! சிரத்திலே, அவர்கள் சூட்டிய இழிவும் பழியும்! நான் இருக்கும் கோலத்தைக் காணீர்.

நான் ஏகாதிபத்யக் கூலியாம்! பிரிட்டிஷாருக்கு ஐந்தாம்படையாம்! பித்தனும், பேயனும்! பகற் கனவாம் நான் காண்பது!

இவ்வளவு வசை மொழியும் ஏன் எனக்கு அளிக்கிறார்கள் தெரியுமா!

நான், உங்கள் உரிமைக்காக— பாகிஸ்தானுக்காகப் போராடுகிறேன் என்பதற்காகத்தான். நமது இனத்தின் உரிமையைக் கேட்கிறேன், அனைவரும் சேர்ந்து ஆங்கிலரிடமிருந்து விடுதலை பெறமுனையும் சூழ் நிலையில்! அது குற்றமாம்!

இனத்தவரே! இஸ்லாமியரே! நாடாண்டவர்களே! நான் செய்தது குற்றமா? உரிமையைக் கேட்பது குற்றமா? பத்துக்கோடி மக்களுக்கு ஒரு நாடு கேட்பது குற்றமா? கூறுங்கள், நான் பழிக்கப்படுவது, இழிவாக நடத்தப்படுவது, யார் பொருட்டு? என் பொருட்டா எனக்கிந்தக் கஷ்டம்? உங்கள் பொருட்டு! உண்மைக்கு, உரிமைக்கு உழைக்கிறேன் என்பதன் பொருட்டு!— உங்கள் பதிலென்ன? உரிமைக்காகப் போரிடும் பண்பு, இந்துக்களுக்கு மட்டுந்தானா? உங்கட்கு இல்லையா! உரிமைப் போர் என்பது, ஊராள ஆங்கிலன் கூடாது என்பது மட்டுமா, அன்றி, இந்துக்கள் இஸ்லாமியரை ஆள்வது கூடாது என்பதும் சேர்ந்ததுவா!

கூறுங்கள், நமது கோரிக்கை அர்த்தமற்றதா, அநியாயமா, அடைய முடியாததா! குதுப்பினாரைப் பார்த்துவிட்டுப் பதில் கூறுங்கள்! தாஜ்மஹாலை எண்ணிக்கொண்டு எனக்குப் பதில் கூறுங்கள்.

அவர்கள் 30 கோடி நாம் 10 கோடி. அவர்களிடம் ஒருமகாத்மா— நமக்கோ, கண்டனத்துக்கு ஆளான நான்தான்.

உங்கள் பதில் என்ன?"

இவ்வளவுதான் அவர் பேசினார்! இதைவிட வேறென்ன வேண்டும்! வெற்றி அவரை நாடிவந்தது!

## தென்னாப்பிரிக்காவில் நிறத் திமிர். தென் இந்தியாவில் சாதித் திமிரா?

மலாயா வாழ் தமிழ்ப் பெரு மக்களே! தொழிற் சங்கத் தலைவர்களே! மருத்துவத் தோழர்களே! கீழ்க்காணும் குறிப்பைச் சற்றுச் சிந்தனை செய்து பாருங்கள். அகில உலகிலும் இல்லாத விசித்திர மனப்பான்மை படைத்த தமிழர்களின் அநியாய அக்கிரமச் செயலைக் கடந்த மாதம் 7—3—47ல் தாய்நாடுசென்ற ரஜூலாக் கப்பலில் கிள்ளான் ஜில்லா மருத்துவ சங்கக் காரியதரிசி தோழர் ப. நடேசனும் வயது முதிர்ந்த அவரது தந்தையும் சென்னையில் 14—3—47ல் கப்பலை விட்டிறங்கி சென்னையில் உள்ள நகர விடுதியில் சாமான்களை வைத்துவிட்டு வெளியில் சென்று விடுதிக்கு வந்த சமயம் கோலாலம்பூரில் தட்டுக்கு வட்டி வாங்கிப் பெரும் பணமூட்டை சேகரித்த செட்டியார் ஒருவர் தோழர் நடேசன் அவர்களை மருத்துவர் என்று கோலாலம்பூரிலேயே அறிமுகமானவர். எனவே இவர் விடுதியாரிடம் சென்று இவன் மயிர் சிரைப்பவன், தாழ்ந்தஜாதியான், இவனுக்கு விடுதியில் இடம் கொடுக்கவேண்டாமென்று சொல்லிவிட்டார். இது விபரத்தைஅறிந்த மானேஜர்உடனே தோழர் நடேசனிடம் வந்து நீ தாழ்ந்த சாதியான், ஆகவே உனக்கு விடுதியில்இடமில்லையென்றுசொல்லி மூட்டை முடிச்சுகளை யெடுத்துக் கொண்டு வெளியில் போகும்படி வற்புறுத்தினர். நேரமோ இரவு மணி 11. இந்த நேரத்தில் முன்பின் பழக்கமில்லாத ஊரில் எங்கு செல்வது? இரவு தங்கி இருந்து காலையில் சாமான்களைஎடுத்துக்கொண்டுவேறு எங்கேனும் இடந்தேடி இருந்து கொள்கிறோமென்று எவ்வளவோ மன்றாடிக் கேட்டும்அந்தப் பகுத்தறிவில்லாச் சாதித் திமிர் பிடித்த கல்நெஞ்சுடையார் இரக்கமின்றி நீ பரியாரியாயிற்றே உயர்ந்தசாதியார்விடுதிக்குள் எப்படி நுழையலாமென்று துவேஷச் சொற்களால் பேசி அந்த விடுதியை விட்டு விரட்டிவிட்டார். பிறகு தோழர் நடேசனும் 75 வயது சென்ற அவரது தந்தையும் சென்னைப்பட்டணம் கடைத்தெருவில் மூட்டை முடிச்சுகளுடன் செய்வதென்னவென்றறியாது அலைந்து திரிந்து இறுதியில் ஓர் தமிழ் முஸ்லிம் தோழர் உதவியால் அன்னார் இல்லத்திற்கு அழைத்துச் சென்று போதிய வசதி செய்து கொடுத்தார். மூன்று நாள் தங்கியிருந்து பிறகு தன் சொந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்ததாகக் கிள்ளான் ஜில்லா மருத்துவ சங்கத்திற்குக் கடிதம் கிடைக்கப் பெற்றது.

தமிழ்ப் பெரு மக்களின் தலைவர்களே! தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்காட்டும் நிறத்திமிரைப்பற்றிப் பத்திரிகையில் அடிக்கடி படித்திருக்கிறோம். பொது மேடையில் வீரகர்ஜனை புரிகிறோம். ஆனால் தென் இந்தியாவில் நடக்கும் இந்த ஜாதித் திமிரைக் கவனிப்பாரில்லையா? எங்கள் போன்ற சிறிது நாகரிகமுடைய மக்களின் கதியே இவ்வாறென்றால் இன்று உலகம் போற்றும் நம் காந்தியார் அவர்களே ஹரிஜனமென்றுபெயரிட்டு அழைப்பவர்களின் கதிஎன்னவாகுமென்பதை யோசித்துப் பாருங்கள். இன்று நாட்டில் தெய்வவிடுதிகளனைத்தும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்திறந்துவிடுவதாகச் சொல்கிறார்களே, ஆனால் மனிதர்களாகிய நாங்கள் மனிதர்கள் குடியிருக்கும் இல்லத்தில் நுழைய அனுமதி மறுப்பது நியாயமா? இந்நிலையிலே தென்னாப்பிரிக்க வெள்ளையரிடம் உரிமை கேட்க என்ன நியாயம் இருக்கிறது? நான் பிறந்த என் சொந்த நாட்டிலே என் வீட்டில் நான் நுழைய சுதந்திரம் இல்லையென்றால் மற்றச் சமுதாயத்தவரும் வெள்ளையரும் நமக்கு எவ்வாறு சம உரிமை அளிப்பார்கள் என்பதே எனது கவலையும் கருததுமாகும். ஜாதியின் பேரால் மக்களைப் பிரித்து வைப்பதென்றால் வருங்கால சுதந்திர இந்தியாவில் தாழ்ந்த இன மக்களுக்கு ஒரு வேளை தனி நாடு இருக்கிறதோ என்னவோ என்று என் போன்றவர்களின் சந்தேகம், ஜாதித் திமிர் ஒழிந்தாலன்றி நிறத் திமிரை ஒழிப்பது பகற்கனவாகும்.

இங்ஙனம்,
கௌ. கா. பெ. முத்தையா.
(ஜனநாயகம்)

✲

## பா. கி.

சென்னை மாகாணத்துக்கு ஒரு திலகமாக விளங்குவது தமிழ்நாடு. அத்தமிழ் நாடெனும் திலகத்துக்குப் பிரகாசமாய்த் திகழ்வது ஆங்கு வதியும் திராவிடமக்கள், அமிழ்தினும் இனிய தமிழைச்செந்தேனொழுகப் பேசும் பாக்கியம் பெற்றவர்களே அவர்கள், அவர்களுக்கு அணிகலனாய்ச் சிறப்புடைத்து நிற்பது அவர்களின் பல திறப்பட்ட கலாவல்லுனர்கள் சமய ஞானத்திலும், அரசியல் ஆற்றலிலும் சங்கீதத்தேர்ச்சியிலும் வன்மை பெற்ற அறிவு நிரம்பியுள்ள பலவகைத் திறமையுள்ள தலைவர்களும் ஆங்கு மலிந்து கிடக்கிறார்கள்.

இங்கு நாம் குறிப்பிட வந்தது சங்கீத ஞானம் நிரம்பிய பிரமுகர்களிலே சிலரைப்பற்றியேயாகும். பாகவதர் கிருஷ்ணன் என்ற இருவரையும் அநேகமாகத் தென்னாட்டு மக்கள் தெரிந்தே இருக்கவேண்டும். அவர்களிருவரும் சங்கீதத்தையும், ஹாஸ்யத்தையும் ஒருங்கே செழிப்புற வளர்ச்சியடையச்செய்து வந்தவர்களில் சிறப்புவாய்ந்தவர்கள் என்பதும் தமிழ்நாட்டு மக்கள் அறிந்த விஷயம்.

சுமார் 2½ ஆண்டுகட்கு முன்னர் யாது காரணம்பற்றியோ அவர்களிருவரையும் அரசாங்க விருந்தினராக இருந்து வரும் படி சர்க்கார் உத்தரவிட்டது. அதன் படியே இந்த இரண்டரை வருடங்களும் கழிந்ததையும், தமிழ்நாட்டுமக்கள்அறிந்தே இருக்கின்றனர். தமிழ்நாட்டில் அவர்களிருவரும் இந்தஇரண்டரை வருடங்களுக்கு முன்னர் இவ்விரு சங்கீத ஹாஸ்யக்கலைகளையும் எவ்வளவுதூரம் உயிர்ப்பித்துவந்தார்கள் என்பதையும், அவர்களிருவரும் இல்லாத இந்த இரண்டரைவருடங்களில் அவ்விரு கலைகளின் வளர்ச்சி எவ்வாறிருந்தது என்பதையும் அவைகளுக்கு இரு சமயங்களிலும் பொதுமக்கள் எவ்வாறான ஆதரவு கொடுத்து வந்தார்கள் என்பதையும் விஷயமுணர்ந்தவர்கள்நன்கறிவர்.

தங்கள் அரசாங்க விருந்தினர்பதவியை சர்க்கார் உத்தரவின்பேரில்உதறித்தள்ளி விட்டு சில தினங்கட்கு முன்னர் தமிழ் நாட்டு மக்கள் சமூகத்தில் பிரசன்னமாயிருப்பதாகக் கேள்விப்பட்டு எப்பகுதியிலுமுள்ள தமிழ்நாட்டு மக்கள் அவ்வாறு விடுவித்த சர்க்காருக்கு நன்றிசெலுத்தாமலிருக்க முடியாது.

தமிழ்நாட்டில் இனிச் சங்கீதத்துக்கும், ஹாஸ்யத்துக்கும் தனிப்பெரும் புத்துயிர் கொடுக்கப்பெறும் என்பது திண்ணம். அவர்களிருவரும் இனிய தமிழ்ச் சங்கீதக் கலையில் இனியும் முக்யத்தவம் வாய்ந்து விளங்குவார்கள் என்பதே எமது நம்பிக்கை.

பா. கி. என்றதுமே எப்பக்கம் வதியும் தமிழ்நாட்டு மக்களும் விளங்கிக்கொள்ளும் ஆற்றலுள்ளவர்கள் என்பதாலேயே பாகவதர் கிருஷ்ணன் என்னும் அழகியநாமங்களைச்சுருக்கமாக பா. கி. என்ற மகுடத்தின்கீழ் அழைக்கலானோம். இதிலிருந்தே அவர்களின் பெயர்கள் எவ்வளவு தூரம் பிரபல்யமடைந்ததாயிருக்கின்றன என்பது தெளிவாகப்புலனாகும்.

'தேசநேசன்.'

## பினங்கில் கவிஞர் பாரதிதாசன் பிறந்த தினவிழா

பினங்கு, ஏப் 28-

இன்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த தினவிழா பிட்ஸ்திரீட் சைனஸ் டவுன் ஹாலில் நடைபெற்றது. போதிய விளம்பரம் இல்லாதது ஒருபுறமிருக்க, மக்கள் கூடுவதற்கு மழையும் ஒரு தடைக்கல்லாயிருந்தது. எனினும் ஆண்களும், பெண்களுமாக நூற்றுக்கணக்கானவர் குழுமியிருந்தனர். கூட்டம் சரியாக 4-40 மணிக்கு ஆரம்பமாயிற்று. விழாக் காரியதரிசி தோழர் ஜி. ஓ. சிங் அவர்கள் இக்கூட்டத்தைச்சிறப்பாகநடத்திவைக்கதோழர்.கே.எஸ். பிள்ளை அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க தலைமையுரை சிலபகர்ந்தபின் திருமதி சி. லட்சுமி அம்மையார் அங்கு குழுமியிருந்த அனைவர்களையும் வரவேற்று ஒரு வரவேற்பு ஆசிரியப்பா படித்தார்.

சிறுமிகளின் இன்னிசைக் கச்சேரி சில நிமிட நேரம் நடைபெற்றது, பண்டித ஆறுமுகம் அவர்கள் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கவிநயத்தையும்அக்காலத்துக்கவிஞர்கள் கவிப் போக்கையும், நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் கவிஞரைப்புகழ்ந்து பாடியவெண்பா ஒன்றையும் பாரதிதாசன் அவர்கள் கவிகள் மேற்கோள்களுடன் எடுத்துக்கூறிப் புரட்சிக்கவிஞரின் திருவுருவப்படத்தைத்திறந்துவைத்தார்.


அதன்பின் தோழியர் சமதர்மம் அவர்களால் திராவிடக் கொள்கை திராவிடக்கலை, பண்பு, மொழி ஆகியக்கருத்துக் கொண்ட விருத்தம் பாடியபின்,அடுத்தபடியாககோலாலம்பூர் திராவிட கழகத்தலைவர் தோழர். ஆ. அங்கமுத்து அவர்கள் கூறுகையில், தைப்பிங், சிங்கப்பூர் போன்ற இடங்களில் சிறப்பாக நடந்திருப்பதாகவும், இவ்வளவு பெரிய பினங்கு நகரத்தில், இங்கு கூடியிருக்கும்கூட்டத்தைப் பார்க்கும்பொழுது வருந்தாமலிருக்க முடியவில்லை யென்றும் ஐரோப்பா ஷேக்ஸ்பியரைக் காட்டிப் பெருமையடைகிற தென்றும், வங்காளம் தாகூரைக் காட்டிப்பெருமையடைகிற தென்றும் கூறியதுடன், புதுச்சேரியில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிடும்பொழுது,பிரஞ்சில்தடை செய்யப்பட்டிருந்த கல்வியை எல்லா மக்களும் கற்கும்படி வழி காட்டிய ஒரு பிரஞ்சுப் பெரியாரின் 101-வது ஆண்டுவிழாக்கொண்டாடுகையில் ஒவ்வொரு மொழியிலும் கவி இசைக்க அழைக்கப்பட்டிருந்ததாகவும், தமிழில் கவிஇசைக்க கவிஞர் பாரதிதாசன் அவர்கள் சென்று "வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை" என்ற முதலடியாகக் கொண்ட நான்கு அடிகள் இசைத்து முடிந்தவுடன், அக்கூட்டத்திற்கு தலைமை வகித்த தலைவர் எழுந்து கவிஞரைக் கட்டித் தழுவி இவர் தான் உண்மையானஉயிர்க்கவிஎன்று புகழ்ந்ததாகவும் தெளிவாக எடுத்துக்கூறியபின், ஜனுப் உஸ்மான் கனி அவர்கள், தமிழ்மொழி உலகிலேயே சிறந்த மொழி யென்றும், தமிழர்கள் தமிழ்மொழியைப் பேணி வளர்க்க வேண்டுமென்றும் கூறினர்.

மலாயாவில் ஏற்படப் போகும் சர்வ கலாசாலையில், இந்திய மொழிகளில் ஒன்றாகிய ஹிந்தியை ஒரு பாடமாக வைக்கவேண்டும் மென்ற கிளர்ச்சி இருப்பதாகவும், தமிழர்களே இங்கு பெரும்பான்மையாக இருக்கிறபடியால் தமிழையே ஒரு பாடமாக வைக்கவேண்டுமென்றதீர்மானத்தைப் பண்டித ஆறுமுகம் பிரரேபிக்க ஆ. அங்கமுத்து ஆமோதித்தார். தீர்மானம் நிறைவேறியது.

பிறகு தலைவர் அவர்கள் முடிவுரை கூறுகையில் ஒவ்வொருவருக்கும் தமிழ்ப்பற்றுதல்வேண்டும்என்று கேட்டுக்கொண்டார்.

[ தேசநேசன் ]

5 உண்மைகள்!
1 குரு மருந்துகள் ஆங்கிலம்—தமிழ் முறை கலந்தது.
2 குரு மருந்துகளின் குணங்களை; லண்டன், அமெரிக்க கெமிகல் சோசைட்டியாரும் கூட ஒப்புக்கொள்கிறார்கள்.
3 குரு மருந்துகளில்
குரு தைலம் 1—8—0
குரு பற்பொடி 0—5—0
4 குரு மருந்துகளே குடும்ப பொக்கிஷம்
5 குருமருந்துகளை உங்கள் ஊர் மருந்து-ஷாப் வியாபாரிகளிடம் கேளுங்கள்.
டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்
குரு மருந்து சாலை,
திருச்சிராப்பள்ளி


"குயில்"
ஆசிரியர்-உரிமையாளர்
பாரதிதாசன்.
10-6-47ல் இருந்து வெளிவருகிறது. மாதம் ஒன்று: கவிதைநூல்.
ஒன்றின் விலை ரூபாய் ஒன்று.
மூன்றுநிற ஓவியந் திகழும் ஆர்ட்போர்டு மேலட்டை. இருநிறந் திகழும் ஆர்ட் ஏடுகள் அமைந்தது.
முகவரி:—
பாரதிதாசன் பதிப்பகம்,
95, பெருமாள்கோயில் தெரு, புதுச்சேரி.
சு. மன்னர் மன்னன்,
அமைச்சர்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

படவேண்டும். சோலைத் தென்றல் வீசவேண்டும். வழிவகை வேண்டும். நிறைவேற்றத்தக்க திட்டம் வேண்டும். ஒற்றுமை வேண்டும். கட்டுப்பாடு கட்டாயம் வேண்டும். இன்றுள்ள அவல வாழ்வில் வெறுப்பும், புது வாழ்வில் அணையாத காதலும் இடம்பெற வேண்டும். மனம் உண்டானால் மூளைக்கு வேலை, மூளைந்தது முடித்த பின்புதான்.

வாழ்க்கையின் அறிவுத்துறையில் நற்பணி புரிபவர்கள் நமது ஆசிரியர்கள். வைகுண்டத்தையும் கைலாயத்தையும் பற்றிட்டும் அவர்கள் விளக்கவில்லை; நமது சிறுவர்களின் எதிர்காலத்தையும் விளக்கமுறச் செய்கிறவர்கள். ஆரம்பத்தில் ஆரோக்கியத்தோடு வளர்க்கப்படாத குழந்தை வாலிபத்தில் மிடுக்காக இருக்காது. குழவிப் பருவத்திலேயே கண்காணிப்பு வேண்டும். அகல உழுவதிலும் ஆழ உழவேண்டும். பொருள் நிறைந்த சொல். உடல் வளம்—நிலவளம்—இரண்டிற்குமே பொருந்தும் என்பதில்லை. கல்வி போதிப்பதிலும் மேற்கொள்ள வேண்டிய சிறப்புவிதி. பாடமுறை—போதிக்கும் போக்கு—கருத்து அமைப்பு மாறவேண்டும். மாற்றியாக வேண்டும். இதற்காக ஆசிரியர்கள் அடிவயிற்றிற்கு ஈரத்துணியைச் சிபார்சு செய்யத்தேவையில்லை. அவர்கள் உள்ளத்தைப் போர்க் களமாக்கிவிட்டு, போதிக்க வேண்டுமெனப் பயமுறுத்திப் பேசுவது அதிகாரத்தின் பண்பைக் காட்டலாம். அவர்கள் தேவைகளைத் தெரிந்துள்ள தன்மையைக் காட்டாது. பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்றார்கள், பஞ்சம் வந்தால் பத்து மட்டுமல்ல. பாராளும் போக்குக்கூட மாறிவிடக்கூடும் ஒரே நொடியில். பஞ்சத்தில், பாரியும் பதுங்கிப்பாயும் புலியாவதுண்டு. உலக வரலாற்றிலே இதுவும் இடம் பெற்றிருப்பதை ஊராளுவோர் பார்த்திருப்பார்களே!

அரசியலார் உதவிபெற்று தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களிலும், நகரசபைகளால் நடத்தப்பெறும் பள்ளிகளிலும் ஆசிரியர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கவேண்டும் என்பதற்காக 10—5—47-ல் வெளியிட்ட உத்தரவை மாற்றிப் புதிய உத்தரவு ஒன்று போட்டிருக்கிறது சர்க்கார். இருக்கும் பண நிலைமைக்கேற்ப செய்யவேண்டியதை எல்லாம் சர்க்கார் செய்தாகிவிட்டது எனும் முடிவையும் சொல்லிவிட்டது. சென்ற மாதம் வெளியிட்ட உத்தரவில் 'லோயர் கிரேட்' ஆசிரியர்களுக்கு ரூ. 20, ஆரம்பச் சம்பளமெனக் குறித்திருந்தது. புதிய உத்தரவில் அவர்களுக்கு ரூ. 32 உயர்த்தப் பட்டிருக்கிறது. ஆண்டுக்கு ஒருரூபாய்வீதம் ரூ. 33 வரையில் அவர்கள் சம்பளம் உயரும்.

'ஹையர் கிரேட்' ஆசிரியர்களுக்கு ரூ. 25 ஆரம்பச்சம்பளமாகவும் கைத்தொழிற் பயிற்சிக்கென ரூ. 5ம் கொடுக்க வேண்டுமென்பது பழைய உத்தரவு. தொழிற் பயிற்சி அலவன்ஸ் ரூ. 5ஐ, சம்பளத்தோடு சேர்த்து ரூ. 30-1-45 ஆக இருக்குமென்கிறது புது உத்தரவு. தொழிற் பயிற்சி அலவன்ஸ் அடிபட்டுப் போய்விட்டது.

'செகண்டரி' ஆசிரியர்களுக்கு ரூ. 35-1½-65 சம்பள விகிதமாகவும் தொழில் அலவன்ஸ் ரூ. 5ம் கொடுக்கப்படவேண்டுமென்பது முன்னைய உத்தரவு. ஆனால் புதிய உத்தரவில் 40-1½-55-2-75 எனக் குறித்திருக்கிறது. தொழில் அலவன்ஸ் சம்பளத்தோடு சேர்த்து விட்டதால், அதற்கென வேறு அலவன்ஸ் கிடையாது.

தொழிற் பயிற்சி அலவன்சுக்கு ஒரு நிபந்தனையும் உண்டு. அதாவது தொழிற் பயிற்சி இல்லாத ஆசிரியர்கள் இரண்டாண்டிற்குள், அதற்கான பயிற்சியைப் பெற்றாக வேண்டும்.

மில் துணியோ ஆளுக்கு ஐந்து கெஜம் ஆண்டுக்கு. கைநெசவுத் துணியோ, மோட்டாரில் செல்லும் சீமானும் மனம் வந்து வாங்க முடியாத விலை. பாலும் தயிரும் வெள்ளாற்றுத் தண்ணீரல்ல. பருப்பு வகைகளோ பாலைவனத்துப் பசும்புற்றரை. முக்கியமான அரிசியோ ரூபாய்க்குஇரண்டுபடி. எண்ணெய்யிலோ எல்லாவற்றிலும்ஏற்றம். குடும்பமோ சிறிதல்ல. ரூபாய்க்கோ வீழ்ப்பாண்டு. முன்னைய ஒரு ரூபாய்க்கு இன்றைய மூன்று ரூபாய் சமம். 'லோயர் கிரேட்' ஆசிரியர் வாங்கும் சம்பளம் இருபத்து மூன்றிலே இத்தனையும் வாங்கியாக வேண்டும். உடை உடுத்திக் கொண்டு ஒழுங்காகப் பள்ளி வரவேண்டும். பாடங்களைப் பரிவோடு போதிக்கவேண்டும். எண்ணையும் எழுத்தையும் அறிவிக்கும் இறைவனாக வேண்டும். அடேயப்பா!

ஆரம்ப ஆசிரியன் வாழ்க்கைப் பாதையில், எத்தனை பாலமற்ற படுபள்ளங்கள்? இவ்வளவையும் இவன் தாண்டித் தாண்டிக் கடக்கவேண்டும். உயிரோடு இருப்பதே அவனுக்குப் பெருஞ்சுமை. காதல்பேச்சோ—மழலைச்சொல்லோ அவனை உயிரோடு இருக்கச் செய்யாது. உயிர்மேல் உள்ள ஆசை ஒன்றுதான் அவனை இயங்கச் செய்கிறது!

ஊராளுவோருக்குக் கார்வேண்டியிருக்கிறது. நல்ல பங்களாவாசம் தேவைப் படுகிறது. சம்பளம் வேறு பெருந்தொகை வேண்டியிருக்கிறது. ஆரம்ப ஆசிரியனுக்கு சம்பளம் ரூ. 23. இந்தத் தண்டனையை அவனுக்களித்த கல்வி மந்திரியாருக்கு ரூ. 1350. முதல் தேதியன்றே கையில் வந்து சேர்ந்து விடுகிறது. போகபோக்யத்திலே புரளுவதற்கு, 58 ஆரம்ப ஆசிரியர்கள் குடும்பம் தொலையாத் துன்பத்தில் துடிக்கவேண்டும்! விலைவாசி

(2ம் பக்கம் பார்க்க)

"NEW JUSTICE"

"நியு ஜஸ்டிஸ்"

(ஆங்கில வார இதழ்)

திராவிடநாடு பிரிவினைக்காகவும், திராவிடர்களின் முன்னேற்றத்திற்காகவும், சுயமரியாதைக் கொள்கைகளைப்பரப்புவதற்காகவும், ஓர் இணையற்ற வார இதழ், ஜூன் 15ம்தேதியிலிருந்து வெளிவரும்.

ஆண்டு சந்தா, ரூபாய் 6 தனிப்பிரதி 2 அணா

ஆசிரியர் A. S. வேணு.

எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை,

ஏஜென்஝ி நிபந்தனைகளுக்குஎழுதவும்

மானேஜர், நியு ஜஸ்டிஸ்,

193, தங்கசாலை தெரு, ஜி. டி. சென்னை.

# வெயிட் ஹாலும்—வார்தாவும்

—✲—

ஆளும் அதிகாரம் மாறிவிட்டது. இறுதிச்சடங்கு இரண்டொரு திங்களில். ஹிந்துஸ்தான் — பாக்கிஸ்தான் இரு அரசுகள். பெரிய சமஸ்தானங்களின் போக்கு விளக்கமில்லை. திருவாங்கூர், சுதந்தர அரசாக இருக்குமெனை எக்காளமிடுகிறார் திவான் சாகிப். நைஜாமும் அதே போக்கு. போர்—பேச்சு வார்த்தைகள் சிக்கல் தீர்க்கும் இரு சாதனம். எது கையாளப்படுமோ!

அரசியல் ஆக்கமன்றம் அமைத்த கமிட்டிகள் பலவும்வேலையைமுடித்து விட்டன. பொதுச் சபையில் திருத்தங்கள் செய்யப்படுமெனச் சொல்வதற்கில்லை. கமிட்டிக் கொள்கை கடிவாளமில்லாத குதிரை. முடித்ததே முடிந்த தீர்ப்பு. பலம் பொருந்திய 'பெடரல் அமைபபு' எனத் தீர்மானிக்கப்பட்டு விட்டது. மாகாணங்களுக்கு மனுபோடும் வேலைதான் அதிகாரமாகக் கிடைத்திருக்கிறது. நிலவரி விதிக்கலாம், நீர்வரிவிதிக்கலாம், சிக்கனமாகச் செலவு செய்து செட்டாகக் குடித்தனம் பண்ணலாம். பாதுகாக்கப் போலிஸ்படையும், பெடரல் அமைப்பின் இராணுவபலமும் அரணாக அமையும் ஆட்சியாளர்களுக்கு.

ஹிந்துஸ்தான் பெடரல் ஆட்சியிலே சேர்ந்துள்ள மாகாணங்களில் பம்பாய் தவிர, மற்றவை அனைத்தும் தொழில் வளம் இல்லாதவைகள். புதுப்புது தொழில்களை ஏற்படுத்த இயற்கை வளம் இருக்கிறது. இயற்கைச் செல்வத்தை உற்பத்திப்பொருளாகச்செய்துதர தொழிலாளர்களும் கோடிகோடியாகஉள்ளனர். தொழிற்சாலை அமைக்க முதல்தான் வேண்டும். முதலுக்கும் குறைவில்லை. இந்தச் சண்டையின் பயனாக இங்கிலாந்து நமக்குப் பெரும்பணம் கடனாகக் கொடுக்கவேண்டி இருக்கிறது. இயந்திரங்களைச் செய்யும் இயந்திரங்களாயினும், வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைச் செய்து முடிக்கும் இயந்திரங்களாயினும், இந்தப் பணத்திற்கு ஈடாகப் பெறலாம். தொழிற்சாலை பெருகுவதின் மூலந்தான் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர வழி ஏற்படும். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. லாபம் ஒன்றையே குறியாகக் கொண்டு தொழிற்சாலைகள் அமைப்பது, இன்றுள்ள உலக நிலையில் பொருந்தாது. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கெனத் தொழிற்சாலைகள்அமைக்கப்படவேண்டும். பின்கூறிய முறையால் முதலாளிகளின் கணக்குப் புத்தகத்தில் வரவு வைக்க இடமிருக்காது எனவே இந்த முறைக்கு அவர்கள் சம்மதியார்கள். இம்முறையை விரும்புவோரையும் அடக்கவே முதலாளிகள் முற்படுவார்கள்.

ஹிந்துஸ்தான் பெடரல் அமைப்பில் யார் ஆதிக்கம் பெறுவார்கள்? ஆருடம் கேட்கத் தேவை இல்லை. தொழிற்சாலை மன்னர்களும், வியாபாரக் கோமான்களுந்தான் ஆதிக்கத்தில் இருப்பார்கள். நேரடியாகக் கலந்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை அவர்கள் காலால் பணித்த கட்டளையைச் சிரத்தால் செய்து முடிக்கும்பண்பினரும் பதவியிலிருக்கலாம். ஆளும்போக்கு, அவர்களுக்கு இலாபம்கொடுத்தால் போதுமானது.

"பாக்கிஸ்தானில் தொழிற்சாலைகள் இல்லை, பெருத்த வியாபாரஸ்தலங்களில்லை, கராச்சி, சிட்டகாங் தவிரத்துறைமுகங்களில்லைவரிவிதிப்பால் அதிக வருமானங் கிடையாது, பாதுகாப்புக்கான செலவு அதிகமாகும், ஆதலால் பாக்கிஸ்தான் வெறும் பாலைவனந்தான்எனப் பிர்லா பரிதாபப்படுகிறார். ஆடு நனைகிறதென்று ஓநாய் அழவேண்டிய அவசியமென்ன? பாக்கிஸ்தானில் இன்று வருமானம்குறைவென்றுகூறுகிறாரே அதே பாலைவனத்தைப்பிரிக்கக்கூடாதென்று ஏன் முன்பு இவர் போரிட்டார்? வருமானமில்லை யென்றாரே யன்றி, எதிர்காலத்தில் வளப்படுத்துவதற்கான இயற்கை அங்கு இல்லை என்று பிர்லா சொல்லக்காணோம்? அங்குள்ள இயற்கையைத் தம் பணந் திரட்டும் பேராசைக்குப் பலியாக்க நினைத்த பண்புதான், இன்று பிர்லாவை, "பாக்கிஸ்தான் பாலைவனம்" என நையாண்டி செய்யத் தூண்டி இருக்கிறது. பாக்கிஸ்தான் இருக்கட்டும்; தென்னாட்டைத்தான் எடுத்துக்கொள்வோமே. பம்பாயிலே உள்ள தொழில் வளத்திலே நூற்றில் ஒருபங்காவது இங்கு ஏற்பட்டிருக்கிறதா இதுவரையில்? ஆமதாபாத்தும் பம்பாயுமல்லவா இன்று ஹிந்துஸ்தான் பகுதி பூராவிலும்ஓய்யாரமாக உலாவிவருகிறது. பாக்கிஸ்த்தான் பகுதியில் பிர்லாவின்பணவேட்டைக்கு முற்றுப்புள்ளி போட்டுவிட்டதால், "நீ எப்படி வாழப்போகிறாய்?" எனக்கேலிப்பேச்சிலே ஆறுதல்காண்கிறார். இருக்கும் எரிச்சலைத் தணிக்காது, அணிவகுப்புக்கே ஆக்கந்தரும்.

உணவு போதவில்லை — தேவையான அளவிற்கு ஆடைகள்கிடைக்கவில்லை—குடியிருக்கும் வசதியோ குறைவு–வேலையற்றோர் தொகையோ நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. மட்டமான வாழ்க்கைத்தரம் இது ஆபத்தான நிலை, காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே' எனும் வாழ்க்கைத் தத்துவம் இனியும் மக்கள் மனத்தில் நிலையாக இருக்க முடியாது. அது ஆட்டங் கொடுத்து அதிகநாள் ஆகிவிட்டது. பஞ்சத்திலே வாடும் மக்களிடம் அதட்டிக் கேட்கும் சுபாவம்! வேண்டிய அளவு இன்றில்லையானாலும், மீண்டும் வங்காள நாடகம் நடைபெறும் எனஎதிர்பார்க்க முடியாது. மான உணர்ச்சி மனதிற்குள்ளாகவே தோன்றி மறைந்துவிடும் மின்னொளி அல்ல. செயலாற்றத் தூண்டும் தீப்பொறி. அடக்குமுறை ஆயுதங்களை வேலியாக அமைத்து,–கொடிய ஆயுதங்களை எருவாக இட்டு—சுயநலமெனும் நீரைப் பாய்ச்சி—லாபம் எனும் பயிரை வளர்க்கும் சமூகப் பண்ணைகளை ஏற்படுத்தப் பார்ப்பது, நல்லாட்சி முறையாகாது. நீடித்து நிற்கக்கூடியதுமல்ல. மணல் மேடு சரிவதுபோல் இமைப் போதில் இருந்த இடம் தெரியாமல் போகும்.

பிரிவினை ஏற்பட்டு விட்டதால் ஹிந்துஸ்தானில் நிலைமை மாறி விட்டிருக்கிறதாம். எனவே ஹிந்துஸ்தானத்திற்கு சர்வவல்லமைபொருந்திய மத்திய சர்க்கார் வேண்டுமாம். மாகாண சுயாட்சி எனும் பேச்சே பேசக்கூடாதாம். சிலநாள் முன் வரையில் இந்தியனாக இருந்தாராம். இனி இந்தியனாக இல்லாது ஹிந்துவாகி விட்டாராம். இதனைக் கூறினது வேறுயாருமில்லை. நமது மதிப்பிற்குரிய ஆந்திர பல்கலைக் கழகத் துணை வேந்தர் சி. ஆர். 'ரெட்டிகாரு அவர்கள்தான். முஸ்லிம்களுக்குப் பரிந்து பேசுபவர்' என்றுகூட தம்மைப் பலர் கருதி இருந்தார்களென்றும் அவரே கூறியுள்ளார். என்னே அபுதம்! சிலநாட்களிலேயே ரெட்டிகாருபோன்ற

மேதைகளையே இந்தியன் எனும் எண்ணத்தைக் கைவிட்டு ஹிந்துவாக மாற்றிவிட்டதென்றால், சாதாரண மக்களை சூழ்நிலை எத்தகைய மாற்றத்துக்குள்ளாக்கி இருக்காது?

“அதிகாரத்தை ஒழுங்காகச் செலுத்துவதிலேயே, பாதுகாப்பு அடங்கிஇருக்கிறது. போதுமான அளவு ஆயுதமின்றிஅதிகாரத்தை அமுல் நடத்தமுடியாது. விஞ்ஞானம்—நவீனத் தொழில்முறை—இல்லாமல்நூதன ஆயுதங்களைஉருவாக்க முடியாது. வகுப்பு—பொருளாதாரம் — இன்னும் மற்றவைகளைக்காரணமாகக்கொண்டு எழும் புரட்சிகளுக்கு எதிராக அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாத்து,அரசியல்அமைப்பை செப்பனிடும் பொறுப்பு இருக்கிறது”

இவை, பேராசிரியர் சி. ஆர். ரெட்டிகாருவின் பொன்மொழிகள். 10—6—47 ஹிந்து பத்திரிகையில் இருப்பது. வகுப்புக் கலவரத்தை அடக்கமட்டும் அவர் விரும்பவில்லை. பசியால் கிளம்பும் புரட்சியைக்கூட நசுக்கி, அமைதியையும் ஒழுங்கையும் நாட்டிடைநிலைநாட்ட, புது அரசியல் முறையைவகுத்திடுக என்கிறார். சுடுகாட்டில் காணும் அமைதி.

பசி போக்க அல்லஅவர் தொழிற்சாலையையும், விஞ்ஞானத்தையும் மேற்கொள்ளச் சொல்வது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பரிகரிக்கவுமல்ல. மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படும்பொருட்களைப் பெருக்கவும் அல்ல. தேவையை வெளியில் சொல்வோரை, வேதனையை விள்ளுவோரை, அமைதியான முறையில் கூட்டாகத் துன்பத்தைத் துடைக்க முனைவோரை-தங்களின்நியாயமான கோரிக்கைகளைப் பெற விழைவோரை-வீழ்த்த,நசுக்க‘ ஆயுதங்களை அதிகமாக்குக! அதற்கான தொழிற்சாலைகளை ஏற்படுத்துக!’ என்கிறார் பேராசிரியர்.

பிர்லா வர்க்கத்தினர் வகுத்த பம்பாய்த் திட்டம், ஆயுத உற்பத்திக்குத் தான் முக்கியத்வம் கொடுத்திருக்கிறது. அத் திட்டம் தீட்டியகாலம் பாக்கிஸ்தான், பகற்கனவெனப் பேசப்பட்டகாலம். உள்நாட்டில் எதைக் காரணமாகக்கொண்டும் கிளர்ச்சி இல்லாத நேரத்திலேயே, ஆயுத உற்பத்திக்கு முதல் இடம் கொடுக்கப் பட்டிருக்கிறது பம்பாய்த்திட்டத்தில்! பிரிவினை ஏற்பட்டுவிட்ட பிறகு, இதனைக்காரணமாகக் காட்டி, ஆயுத உற்பத்தியே உடனடி தேவை என வற்புறுத்தி, அதற்கான தொழிற்சாலைகளை அமைக்காமலா விடப் போகிறார்கள் அவர்கள்? ரெட்டிகாரு போன்றவர்கள் அரசு ஆக்க மன்றத்தில் இல்லையே என்று நாம் எண்ணியதுண்டு. இவர் போன்றோர் இருப்பதிலும் இல்லாமல் இருப்பதே மேல். இவர்போய் செய்திருக்கும் வேலையை ஓமந்தூராரும் ஒழலூராருமே செய்து விடுவார்கள்!

நம்மீது படையெடுத்துவர ஒரு நாடும் இன்று தயாராக இல்லை. பிரிட்டிஷார் காலிசெய்ய இருக்கும் இடத்தை அலங்கரிக்க அமெரிக்காவிற்குத்தான் ஆசையும், சக்தியும் இருக்கிறது. நலிவடைந்து போன பிரிட்டிஷ் பொருளாதாரம், இங்குள்ள பிர்லா வர்க்கத்தினரோடு கஷ்டக் கூட்டாக இருக்கமுடியுமேயன்றிப்,பலமுள்ளஎஜமானுகஇருக்க முடியாது. அதற்கான பொருள் பலமும்—அதிகாரபலமும் உடையவர்கள் பிர்லாகோஷ்டியினர் தான். இவர்களுக்கு லாபத்திலே நிராசை ஏற்பட்டு விட்டதென்று காந்தியார் கூட நம்பத் தயாராக இல்லை.

பிர்லாவின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேச காங்கிரஸ் தலைவர்களுக்குத் துணிவு கிடையாது. அது மட்டுமல்ல; அவர் போக்கே நேர்மையானது எனக் கூறுபவர்கள். பிர்லாவின் மூலதனத்தால் நடைபெறும் பத்திரிகைகள் பல. பலமானபிரசார பீரங்கி அவர் கையில் இருக்கிறது. எல்லாவற்றையும் விட காந்தியாரின் பூரண ஆசீர்வாதமும் அவர்க்குண்டு. சமுதாயத்தின் தர்மகர்த்தராக இருக்கவேண்டும் எனும் அளவுக்கு, ஆசீர்வாத பலம் பிர்லாவிற்கு இருக்கிறது. அறிவிருக்கிறவர்களை என்ன விலை கொடுத்தேனும் வாங்கும் சக்தி இருக்கிறது. மக்களுக்கும் தேசீய மயக்கமிருக்கிறது. தலைவர்களிடம் பக்தி காட்டும் பண்பும் மக்களை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. எனவே பிர்லாவிற்கு வெற்றி நிச்சயந்தானே?

துணியோ — சர்க்கரையோவேறு உணவுப் பொருட்களோ உற்பத்தி செய்வதால் இன்று அதிகலாபம் கிடைக்காது. மக்களுக்குள்ள வருவாய் உற்பத்திப் பெருக்கத்தைத் தூண்டும் நிலையில் இல்லை. சந்தையிலே சரக்குக் குறைவாக இருந்தால் தான், இருக்கும் சரக்கை அதிக விலைக்கு விற்கமுடியும். இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். சரக்கு அதிகமாகிவிட்டால்,அதற்குக்கிராக்கியும் இருக்காது. கொள்முதல் விலைக்கே குறைத்து விற்கவேண்டியும் ஏற்படும். லாபகரமாக விற்கவேண்டும் என்பதற்காக, அமோகமாக உற்பத்தியாகும் பொருட்களைக்கூட அழித்து விடுகிற மனோபாவம் உடையவர்கள் இவர்கள். அமெரிக்காவில் இது சர்வ சாதாரணம். சில நாளைக்கு முன்பு கூட, உலகமெல்லாம் உணவுப் பொருள் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் பொழுதும், கோதுமையைமாட்டுக் குணவாக்கினதாகப் பத்திரிகையில் படித்தோம். உருளைக்கிழங்கை அழுகவைத்து நிலத்திற்குஎருவிட்டதாகவும் செய்திவந்தது. மக்கள் க்ஷேமம் அல்ல இவர்கள் குறிக்கோள் சொந்தலாபந்தான் நோக்கம்.

இன்று மக்கள் உள்ள ஏழ்மை நிலையில், ஆயுத உற்பத்தி ஒன்று தான் லாபத்தைக்கொடுக்கும் தொழிலாக இருக்க முடியும். இதனை வாங்குவது மக்கள் அல்ல. ஆளும் அரசே வாங்கும். எனவே தொழிலிலே மந்தம் ஏற்படக் காரணமில்லை. லாபமும் முதலாளிகளுக்குக் குறையாது. பாக்கிஸ்தான் பூச்சாண்டியைக் காட்டி, தேசத்தின் பூர்வச் சிறப்பு எனப் பேசி, நல்ல பயிற்சிப் பெற்ற படையையும் தோற்றுவிக்கலாம். இதனால் சிலரின் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவும் வழி பிறக்கும். சிற்சில இடங்களில் படை தளங்களும் அமைக்கலாம். இதனாலும் சிலருக்கு வேலை கிடைக்க வழி பிறக்கும். எதுவும்நிரந்தரமல்ல. ஆரம்பத்திலே உற்சாகமாகத்தான் இருக்கும். அழிவைத் தேடித் தரும் அருமையான பாதை இது. ஜெர்மன் ஏற்றுக் கொண்ட திட்டம் இதுதான்.

ஆசிய நாடுகள்கூட ஹிந்துஸ்தானத்திலிருந்து, ஆயுதங்களைக் கொள் முதல் செய்யக்கூடும். அதனாலும் இங்கு ஆயுதத் தொழிற்சாலையில் எப்பொழுதும்வேலை நடந்தவண்ணம் இருக்கும். இலாபமும் அமோகமாகக் கிடைக்கும். முடிவென்ன? நாம் உற்பத்தி செய்து விற்ற ஆயுதமேகூட, நம்மையே கொன்று குவிக்க உதவும். யார் இறந்தால் தான் என்ன? முதலாளிகளுக்கு வரும் லாபம் குறைந்துவிடவா போகிறது? •

பாகிஸ்தான் குட்டையில் மீன் பிடிக்க முடியாது இனிப் பிர்லாவர்க்

கத்தினரால். தென்னாட்டிற்கு திக்விஜயம் செய்யவேண்டியதுதான். இங்கு அவர்களுக்கு ஒன்றும் தடை இருக்காது. மாகாண சர்க்காரோ வரவேற்புக் கூறும் நிலையில்உள்ளது. ஓமந்தூராருக்கோ இது ஒன்றும் புரியாது. க. இராஜன் பரம்பரையினரோ பிர்லா வர்க்கத்தினருடன் ஒன்றுபட்டு விடுவார்கள். பூவோடு சேர்ந்த நார்போல் மணம் பெறுவர்கள். துன்பத்தில் உழல வேண்டியவர்கள் திராவிடர்கள்தான். சைவம் வைஷ்ணவம், இஸ்லாம் எதுவும் இந்தச் சுரண்டலுக்குத் தப்பாது.

பிரச்சார இயந்திரமோ அவர்கள் கையில். தமிழர்கள் என்பவர்களால் ஒன்றிரண்டு பத்திரிகைகள் நடத்தப்பட்ட போதிலும், எதுவோ ஒரு காரணத்தை உள்ளத்தில் மறைத்து வைத்துக்கொண்டு, வேட்டையாட வந்தவர்களுக்கு விருந்து உபசாரம் செய்வார்கள். தோழர் சொக்கலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'தினசரி'10-6-47ல் 'தலைமைசர்க்கார்' எனத்தலைப்பிட்டு அடக்குமுறைக்குத் தூபமிடுகிறது. அதனைக்கீழே தருகிறோம்.

"பாகிஸ்தானுக்கு பக்கத்திலுள்ள மாகாணங்களை நயத்தாலும் பயத்தாலும் ஆக்கிரமிக்கமுயற்சிப்பார்கள். லீகர்களுடன் சேர்ந்துகொண்டு தேசத்தை குட்டிச்சுவராக்க சில அகம்பாவம் பிடித்த ஐந்தாம் படைக்காரர்கள் முயற்சிசெய்யலாம். வட இந்தியர்களிடம் என்ன உறவு வேண்டி இருக்கிறது என்று சிலர் பிரசாரம் செய்வார்கள். தெற்கு மாகாணங்கள் தனியாகவாழ வேண்டுமென்றுசிலர் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். இம்மாதிரியாக இந்தியாவைஒரே நாடாக இருக்க விடாமல் துண்டு போடுவதற்கு பிரசாரம் செய்கிறவர்களுக்கு ஒரே ஒரு நோக்கம்தான் உண்டு. அதாவது தாங்கள் தலைவர்களாக வரவேண்டும் என்பதுதான் அந்த நோக்கம். இதற்காக இந்தியாவைச் சின்னபின்னமாக்கி மீண்டும் யாருக்காவது அடிமையாக்கி வைக்க அவர்கள் செய்யும் முயற்சியை ஆரம்பத்திலேயே நசுக்கி விட வேண்டும்."

தெற்கு மாகாணங்கள் தனியாக வாழவேண்டுமென்பவர்களை நசுக்க வேண்டுமாம். இந்தியாவைச் சின்னபின்னமாக்கி யாருக்காவது அடிமையாக்க விரும்புகிறவர்களாம். ஏன் இந்தக் கோபம்? எதற்கு இவ்வளவு கடுமையான சொற்கள்?

காங்கிரஸ் போக்கைக் கண்டித்தவர்களை எல்லாம் இது வரையில், ஏகாதிபத்திய ஏவலாளிகள் எனக் கூறி வந்தனர். ஏகாதிபத்தியம்வெளியேறிவிட்டபிறகு, காங்கிரஸ் ஆட்சி முறையில் நேர்மை வேண்டும் எனச் சொல்லுபவர்களுக்கு, வெளியார்களுக்கு நாட்டை அடிமையாக்க விரும்புகிறவர்களெனப் பெயர்சூட்டப் படுகிறது. இதென்ன விந்தை! இந்த மனப்பண்பிற்கு ஜனநாயகம் எனும் பெயர் பொருந்தாதே!

தேசியத் தோழர்களே! விடுதலைக்காக தியாகங்கள் பலசெய்து துரும்பானவர்களே! இதற்கா நீங்கள் தியாகஞ்செய்தது? தடியடிபட்டது? இரத்தஞ்சிந்தினது? ஏகாதிபத்யச் சுரண்டல்கூடாதென்றது வடநாட்டுச் சுரண்டலுக்கு நமது தென்னாட்டை பலியாக்கவா? வடவர் தொடர்பு கூடாதென்கிறவர்கள் நாட்டை யாருக்காவது காட்டிக்கொடுப்பவர்களா? அல்லது வடநாட்டார் சுரண்டல்தான் வேண்டுமென்று கூறுபவர்கள் அதனைச் செய்பவர்களா?

அடக்குமுறையால் சிறைவாசம், தடியடி, குண்டடி, தூக்குமேடை, இவ்வளவும் கிடைக்கலாம். சிலபலர் பலியாகலாம். ஆனால் அவர்கள் கொண்ட கருத்தைக் கொலை செய்து விட முடியாது. இதனை ஆசிரியர் நன்றாக அறிவார். ஏகாதிபத்தியம் வீசிய அடக்குமுறை கோரிய பலனைக் கொடுத்திருக்குமானால், 'தினசரியும்' இல்லை; அதன் ஆசிரியரும் இல்லை. இன்று ஹிந்துஸ்தான் சுதந்திர அரசும் ஏற்பட்டிருக்காது. ஏனோ இந்தச் சிறிய விஷயம் ஆசிரியருக்குப் புலனாகவில்லை. முஸ்லிம் லீக் என்றாலே பொறுமையைப் பறிகொடுத்துப் புலியாக மாறிவிடுகிறார்ஆசிரியர். தானும்மையும்தாராளமாக இருக்கிறது என்பதற்காக எதை எதையோ எழுதி, தம் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளுகிறார். அவர்ஆசையும் தீர்ந்து போகட்டும்.

மாகாண சட்ட சபை இருந்தது. தேர்தலும் நடந்ததுண்டு. சிலர்சட்ட சபை மண்டபங்களை அலங்கரித்ததும் உண்டு. சட்டம் செய்வார்கள். கவர்னர் துரையின் அங்கீகாரம் பெறவேண்டும். டில்லி சட்டசபையும் இதே நிலைதான். அங்கத்தவர்கள் எதைத் தீர்மானித்தாலும், வைசிராய் ஒப்பம் இல்லையேல் கழிவுக் கூடையைத்தான் தீர்மானம் அலங்கரிக்கும். வைசிராயும் சுயேச்சையாகச் செய்து விடமாட்டார். வொயிட் ஹால், ஜாடை காட்டினால்தான் தீர்ப்புக் கிடைக்கும். இந்த நிலைதான் இனி ஹிந்துஸ்தானத்திற்கும். மாகாண சட்டசபைகள் எல்லாம வெறும் பொம்மைக் கொலுதான். வார்தா உத்தரவிற்குக் காத்திருக்க வேண்டியதுதான்.

வொயிட் ஹால் நாடகம் முடிந்துவிட்டது. வார்தா விலாசம் ஆரம்பமாகிறது. இனிந்தான் நாம் பெற்ற அரசியல் விடுதலையின் பயனை அனுபவிக்கப் போகிறோம். தெளிவும், உரமும் இருந்தால் நினைத்ததைப் பெறலாம். வேண்டுவது செயல், ஒன்றுபட்ட செயல்!

"மத விஷயங்களை முன் நிறுத்தி கடவுள் நம்மைப் பரிசீலனை செய்ய மாட்டான். நமது செயல்களை முன்னிறுத்தியே நம்மைப்பரிசீலனை செய்வான் என்று நம்பக்கூடியவன் இந்த உலகத்தில் ஒருவனாவது உண்டா?"

—வால்டையர்.

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press.
317—319 Hodgsonpet Conjeevaram.